என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

April 2015

FREE ISSUE

லண்டன்

தமிழர் தகவல்


London Tamil's Information

அருள்மிகு ஸ்ரீமேருபுரம்
மகாபத்ரகாளி
அம்மன் தேர்த்திருவிழா
26
ஏப்ரல் 2015



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


லண்டனில் No1
நகை மாளிகை
Lakshamis
Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
The No 1 Brand
Nelli
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# 13வது ஆண்டில் தொடர்கிறது தமிழர் தகவல்




## தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2046

**சித்திரை**

மலர் : 13

இதழ் : 143

ஏப்ரல் - 2015

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com

படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!







வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!



# Shastra Cards



World class designer invitations
in affordable prices at
www.shastracards.com



#71, 2nd Floor, Dr. Radhakrishnan Salai, Mylapore, Chennai - 600 004. INDIA

Ph : 91 44 4217 2200 / 91 76 333 222 / 91 76 322 444 info@shastracards.com

**LycaFly**
Travel the world for less

24x7
Call us now 0207 132 32 32
or visit www.Lycafly.com

## THE MOST POPULAR AGENT OF SRILANKANS



# £50 Free
## Lycamobile top-up
### with every single return ticket to
# Colombo



T&C apply

## SriLankan Airlines
### Non stop flights to Colombo
# fr £205 + taxes

OMAN AIR
QATAR AIRWAYS
BRITISH AIRWAYS

We work with over 160 airlines

### Best deals of the week

| | | |
|---|---|---|
| New York | fr | £439 |
| Chennai | fr | £441 |
| Dubai | fr | £298 |
| Singapore | fr | £488 |
| Bangkok | fr | £457 |
| Toronto | fr | £444 |
| Melbourne | fr | £670 |

Incl Taxes

**WEMBLEY**
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

**TOOTING**
232 Upper Tooting Road,
London SW17 7EW · 0207 132 0057

**MILTON KEYNES**
16 Stratford Road MK12 5LJ
0207 993 6355 / 0190 822 7562

IATA

# KANCHANA - 2 UK SHOW TIMES

## FROM THU 16TH APR - HARROW SAFARI CINEMA

THU 16TH APRIL @ 8.00PM, FRI 17 APRIL @8.00PM
SAT 18TH APRIL @ 8.00PM, SUN 19TH APRIL @5.00PM
ADVANCE BOOKING - HTTP://WWW.SAFARICINEMA.COM/ OR CALL - 0208 426 03 03

## FROM THU 16TH APR - EASTHAM BOLEYN CINEMAS

THU 16TH APRIL @8.00PM, DAILY SHIOWS :1.00PM - 4.00PM-7.00PM-10.30PM
ADVANCE BOOKING - CALL - 020 8471 6147

## FROM THU 17TH APR - ODEON CINEMAS

WIMBLEDON, BELFAST, STREATHAM, COVENTRY SKYDOME, BLACKPOOL, HULL, LEICESTER
ADVANCE BOOKING - HTTP://WWW.ODEON.CO.UK/ OR CALL - 08712 244 007

## FROM THU 17TH APR - CINEWORLD CINEMAS

ILFORD, FELTHAM, WEMBLEY, WANDSWORTH, O2 GREENWICH, STAPLESCORNER
WOODGREEN, BIRMINGHAM, MILTONKEYNES, LIVERPOOL, STOCKPORT, SHEFFIELD, LUTON, CRAWLEY
CARDIFF, BRADFORD, GLASGOW RS, TELFORD, SWINDON, ALDERSHOT, IPSWICH, EDINBURGH
MIDDLESBROUGH, ASHFORD, ABERDEEN, BOLDON, BRISTOL, SOUTHAMPTON, NORTHAMPTON
ADVANCE BOOKING : HTTP://WWW.CINEWORLD.CO.UK OR CALL - 0871 220 1000
SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD









இலங்கையில் உள்ள உறவுகளை வியப்பில் ஆழ்த்த மற்றும் விரும்பும் உணவுகளை அன்பளிப்பாக இலங்கையில் உள்ள இல்லங்களின் வாசல் சென்றடையும் துரித சேவை. விரையுங்கள் www.orderfood.lk இணையதளத்துக்கு




# www.orderfood.lk

**Order foods & gifts for your friends & loved ones in Sri Lanka**
**Order online at www.orderfood.lk**

## Order from as little as £10

**Get 10 % discount on your order.**

Promotion code: UK150630 Offer valid until: 30/06/2015

- கொழும்பு
- மட்டக்களப்பு
- யாழ்பாணம்
- திருகோணமலை
- கிளிநொச்சி
- வவுனியா
- மன்னார்

*மேலும் விரைவில் பல இடங்கள்.*

Available on the App Store
ANDROID APP ON Google play

உங்கள் தேவை எங்கள் சேவை
UK +44 (0)207 118 0550
SL +94 114 444 111

info@orderfood.lk
/orderfood
/orderfoodlk


AMIRTAA
AMIRTAA
AMIRTAA
AMIRTAA

# சேலை - சாரி





- மாதம் ஒரு தகவல்



மனித வாழ்க்கைக்கு உணவும், உடையும் மிகவும் அவசியமாகிறது.

நாகரிகம் தொடங்கிய காலம் தொட்டு உடையின் தேவை முக்கிய இடத்தை வகிக்கிறது.அதுவும் பெண்களுக்கான உடைகளே மிகவும் பிரசித்தி பெற்றது. சேலை என்று சொன்னால் அது காஞ்சிபுரம் என்பார்கள். இது தமிழ் நாட்டு பெண்களின் கனவு உடை. ஆனால் இந்தியா முழுவதும் சேலைகளின் தேவை இருந்தால், காசி, பெங்களூர், காஷ்மீர்,

மைசூர் போன்ற இடங்களில் உற்பத்தியாகும் சாறிகளும் மிகவும் பிரபலமானதே.

இன்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் காசியில் இருந்து வரும் பனாரஸ் (மணிபுரி) சாறிகள் மிகவும் பிரபலமானவை. இந்தச் சாரிகள் மின்தறியில் உற்பத்தி செய்யப்படுபவை. அதனால் இதன் விலைகள் மலிவானதாக இருந்தது. காஞ்சிபுரத்தில் உற்பத்தியாகும் சேலைகள் தறியில் 20, 30 நாட்களாக நெய்யபடும் இதனால் விலை உயர்ந்தவை. மக்களை ஏமாற்றி வியாபாரம் செய்யும் ஒரே வியாபாரம் புடவை மட்டுமே.

காஞ்சிபுரம் Original பட்டுத்தான் விலை உயர்ந்தவை. இதற்கு ஈடாக தர்மாவரம், ஆரணியம் போன்ற சாறிகள் பிரபலமானவை.

அந்த நாட்களில் பட்டுச் சாறிகளின் ஜரிகை வெள்ளியினாலும், தங்கத்தினாலும் ஆனவை. இதனால் விற்பனையிலும் முதலிடம் வகிப்பவை.

தர்மாவரம், ஆரணியம், பனாரஸ் போன்றவை போலி ஜரிகையினால் ஆனவை. காலப்போக்கில் இந்த ஜரிகைகள் கறுத்துவிடும். இதனால் இவற்றை கண்டுபிடிப்பது சுலபமாக இருந்தது. ஆனால் இன்று ஜரிகைகள் கண்டு பிடிக்கமுடியாத அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது.

பல வருடங்களுக்கு முன்னர் ரூ250 ரூபாய் விற்ற காஞ்சிபுரம் இன்று ரூ60,000 என்றால் நம்ப முடியுமா? இதனால் தான் போலி ஜரிகை சாறிகள் சந்தைகளில் போட்டி போடுகின்றன. கடந்த 10 வருடகாலமாக Party சாறி என்ற ஒருவகை சேலைகள் சந்தையில் பெரிய அளவில் விற்பனையாகிறது. இதில் உண்மை எது, போலி எது என்று கண்டுபிடிப்பது மிகவும் கடினம். இவை கல்கத்தாவில் இருந்து வருபவை.

தமிழ்நாட்டில் சென்னையை எடுத்துப் பார்த்தால் ரத்தன் பஜாரில் தான் புடவை கடைகள் காணப்பட்டன. இன்று மிகப்பெரிய சந்தையாக இருக்கும். தி.நகர் பகுதியில் நல்லி -சின்னச்சாமி கடை மட்டுமே பட்டுக்சாறி விற்பனையில் இருந்தது. இங்கு சாறிகள் வகைப்படுத்தி உண்மையாக விற்பார்கள். இதனால் தான் நல்லி 80 வருடமாக சந்தையில் நின்று பிடிக்கிறது.

திருநெல்வேலி போன்ற இடங்களில் இன்று RMKV போன்ற கடைகள் 5 வருட 6 வருட காலமாகத் தான் சென்னைக்கு தங்கள் வியாபாரங்களை விஸ்தரித்து உள்ளனர்.

"போத்தீஸ், சென்னை சில்க், சரவணா ஸ்டோர்ஸ், சுந்தரி" போன்ற கடைகள் 7, 8 வருடம் தான் தி.நகரில் செயல்படத் தொடங்கியது. தி.நகரில் சிறப்பான கடைகள் என்று சொன்னால் நல்லி, RMKV, குமரன் கடைகளைத்தான் சொல்ல முடியும். RMKV 92 வருடங்களாக பட்டு வியாபாரம் செய்கிறது. இங்குதான் சுத்தமான காஞ் சிபுரம் பட்டுசேலைகள் வாங்கமுடியும்.

வியாபாரத்துக்கு கோடிகணக்கில் விளம்பரம் செய்யும் கடைகளில் எல்லாமே ஏமாற்றம் தான். மக்கள் தான் இவற்றை கண்டுபிடித்து நல்ல பொருட்களை வாங்க வேண்டும்

சேலைகள் பற்றிய விவரம் தொடரும்,

# வருத்தத்துடன் பதிவு செய்கிறோம்

சிறிலங்கா நாடாளுமன்றத்தின் புதிய அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டுள்ள தமிழ் அமைச்சர் ஒருவரை லண்டன் வாழ் ஈழத்தமிழர்கள் ஐரோப்பாவிற்கு வருகைதரச் சொல்லி வரவேற்றிருக்கிறார்கள். மைத்ரி பால சிறிசேனா - ரணில் விக்ரமசிங்கே கூட்டணியில் அமைந்த புதிய சிங்கள அரசு, நம்பிக்கை அளிப்பதாக இல்லை என்பதை தமிழர் தகவல் ஏற்கனவே வெளிப்படுத்தியிருக்கிறது. அதற்கேற்பவே அவ்வரசின் போக்குகளும் அமைந்து வருகின்றன.

ஈழத்தில் இருக்கின்ற தமிழர்களின் நிலை வேறு, புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலைவேறு. தாயகத்தில் இருக்கின்ற தமிழர்கள் உயிர்வாழ்வதற்கே போராட வேண்டியிருக்கிறது. அதன்பொருட்டு தங்களுடைய உணர்வுகளை மறைத்துக் கொண்டு, நாட்களைக் கடத்த வேண்டிய சூழ்நிலைக் கைதியாக உள்ளனர். இன்னமும் விலக்கிக் கொள்ளப்படாத இராணுவ நிலைகளுக்கு நடுவில், அன்றாட நடைமுறைகளே சிக்கல்களாய் மாறிப்போனதொரு வாழ்க்கை அவர்களுடையது.

இத்தனை இன்னல்களுக்கு இடையிலும், வாக்குச் சீட்டுகளை ஆயுதங்களாக்கி, கொடுங்கோலன் ராஜபக்சேயை ஆட்சியிலிருந்து துரத்தியடித்தனர். இன்று சம அதிகாரப் பகிர்வு என்பதை நோக்கி நகர வேண்டிய கட்டாயத்திற்கு அங்குள்ள தமிழர்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். எனவே அவர்கள் சிறிலங்கா அமைச்சரவையிலுள்ள தமிழ் அமைச்சர்களை அணுகி, கோரிக்கை வைப்பதில் உள்ள நியாயத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் அந்த அமைச்சர்களுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள் காவடி தூக்குவதைத்தான் சகித்துக் கொள்ள முடியவில்லை. புலம் பெயர்ந்த நாடுகளில் நல்லதொரு வாழ்நிலையில் உள்ள இவர்களுக்கு அந்த அமைச்சர்களின் தயவு எந்த வகையில் உதவக் கூடும் என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அந்த அமைச்சர்கள் இதுவரை ஈழமக்களின் நிலையில் எந்தவொரு சிறு மாற்றத்திற்கான முன்னெடுப்புகளையும் எடுத்ததாக நமக்குத் தெரியவில்லை. பிறகு எதற்காக இந்த வரவேற்பும், மகிழ்ச்சிக் கொண்டாட்டமும். இந்திய - தமிழகப் பெருமுதலாளிகள் இலங்கையில் முதலீடு செய்ததையும், செய்ய இருப்பதையும் முன்னிட்டு, இருநாட்டு அமைச்சர்களின் போக்குவரத்துகள் அமைகின்றனவே அன்றி, உண்மையில் ஈழத்தமிழர் வாழ்வை மீட்டுருவாக்கம் செய்கின்ற நோக்கத்தை பூதக்கண்ணாடி கொண்டு தேடினாலும் கிடைப்பதற்கில்லை.

ஒருவேளை புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் அப்படி ஒரு எண்ணமோ, செயல்திட்டமோ இருக்கக்கூடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. சிறிலங்கா நாடாளுமன்றத்தின் அமைச்சர்களின் வரவில் இவர்கள் அடையும் மகிழ்ச்சி அப்படியொரு தோற்றத்தைத் தருகிறது என்பதை தமிழர் தகவல் வருத்தத்துடன் பதிவு செய்ய விரும்புகிறது.

# இந்தியா
# - மகள்களுக்கான நாடா?

இரா.உமா

பிபிசி ஊடக நிறுவனம் எடுத்துள்ள, 'இந்தியாவின் மகள்' என்னும் ஆவணப்படம் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தியத் தலைநகர் தில்லியில் மருத்துவ மாணவி ஜோதி சிங் (நிர்பயா) - இதுதான் அவருடைய உண்மையான பெயர் - ஓடும் பேருந்தில் கொடூரமான பாலியல் தாக்குதலுக்கு உள்ளாகி, மரணமடைந்த நிகழ்வு நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அந்தக் கோர நிகழ்வை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட ஆவணப் படம்தான் இந்தியாவின் மகள். அந்த வழக்கின் குற்றவாளிகளில் ஒருவனான, முகேஷ் சிங்கின் நேர்காணலையும், ஜோதி சிங்கின் நண்பர், பெற்றோர் ஆகியோரின் கருத்துகளையும் உள்ளடக்கியது அந்த ஆவணப்படம். அந்த சமயத்தில் நாடு முழுவதும் நடைபெற்ற தீவிரமான போராட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளது. இடையிடையே குற்றாவளிகள் தரப்பு வழக்கறிஞர்களின், 'ஆணாதிக்க - ஆதிக்க சாதி' பேச்சுகளும் இடம்பெற்றுள்ளன.

கலாச்சாரம், பண்பாடு என்றுசொல்லி, இந்துத்துவக் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் உலக அரங்கில் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த, இந்தியாவின் உண்மை முகம் என்னவாக இருக்கிறது என்பதை உலக நாடுகள் தெரிந்து கொண்டுவிடக்கூடாதே என்று, இந்த ஆவணப்படத்திற்கு அவசர அவசரமாகத் தடை விதித்தது இந்திய உள்துறை அமைச்சகம். ஆனால் இதையும் மீறி பிபிசி 'இந்தியாவின் மகளை' ஒளிபரப்பி, இந்தியாவின் மகன்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் பெண்களை எப்படிப் பார்க்கிறார்கள், நடத்துகிறார்கள் என்று வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது.

'அவள் கண்களில் பயம் தெரியவில்லை. அது எங்கள் கோபத்தை அதிகமாக்கியது - கடுமையாக நடந்து கொண்டோம்' என்கிறான் முகேஷ்சிங். ஒரு ஆணைப் பார்த்தவுடன், ஒரு பெண்ணுக்கு அச்சமும், நாணமும் வரவேண்டும். அதுதான் இந்த நாட்டுக் கலாச்சாரமும், பண்பாடும் வகுத்து வைத்திருக்கின்றன பெண்ணிற்கான இலக்கணம். அந்த இலக்கணத்தை மீறும் பெண்களை, இந்த நாட்டு ஆண்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், அதைத்தான் நாங்களும் செய்தோம் என்னும் தொனிதான், முகேஷ்சிங்கின் பேச்சில் காணப்படுகிறது.

முகேஷ்சிங் உள்ளிட்ட குற்றவாளிகளின் பெற்றோர்களும் இதில் பேசுகின்றனர். தில்லியின் ஆர்.கே.புரம் என்னும் சேரிப்பகுதியில் அவர்களின் வீடுகள் உள்ளன. அந்தப் பகுதியிலும் இந்தப் படத்தைத் திரையிட்டிருக்கிறார்கள் ஒரு தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள்.

கடந்த காலங்களில் தொடர்ந்து, பல வெளிநாட்டுப் பெண் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தியாவில் இழைக்கப்பட்ட பாலியல் வன்கொடுமைகளைத் தொடர்ந்து, 'இந்தியாவிற்குப் பெண்கள் யாரும் தனியாக சுற்றுலாவுக்குப் போக வேண்டாம்' என்று அந்த நாடுகள் எச்சரித்தது பலருக்கும் நினைவிருக்கலாம். அண்டை நாட்டு மகளுக்கு மட்டுமன்று, இந்தியாவின் மகளுக்கே இங்கே பாதுகாப்பில்லை என்பதை, 'இந்தியாவின் மகள்' ஆவணப்படம் தெளிவாக்குகிறது.


கண்டிப்பாக அனைவரும் பார்க்க வேண்டிய ஆவணப் படம்.

# 8வது அதிசயம்

# யாழ்ப்பாணம் தட்சிணாமூர்த்தி பிள்ளை!

எழுத்தாளர்: லலிதாராம்

**மறக்கப்பட்ட மாமேதைகள்**



தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் சென்று பெரும் பெயர் ஈட்டியவர்கள் பலருண்டு. இலங்கையில் பிறந்து, தமிழகத்தின் ஒவ்வொரு ஊரிலும், இவர் வந்து வாசிக்கமாட்டாரா என்று, ஏங்க வைத்தவரும் உண்டு. அவர்தான் தவில் மேதை, யாழ்ப்பாணம் தட்சிணாமூர்த்தி பிள்ளை (1933 1975).

தட்சிணாமூர்த்தி பிள்ளை!




மறைந்த நாகஸ்வர மேதை செம்பனார்கோவில் வைத்தியநாதன், "நாங்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றபோது, ஒரு சிறுவன் வாசிக்கிறான் என்று சொன்னார் கள். காவேரிக் கரையில் நாம் பார்க்காத கலைஞர்களா என்று சற்று இளக்காரமாய்த்தான் நினைத்தோம். அந்தச் சிறுவன் வாசித்துக் கேட்டதும் ஸ்தம்பித்துப் போனோம்," என்று கூறியுள்ளார்.

மேதைகளின் இசைக்கு ஒரு பொதுத்தன்மை உண்டு. பற்பல அடுக்குகளாய் அமைந்து, பாமரர்க்கும் பண்டிதர்க்கும், ரசிக்கவும் கற்கவும் ஏதோ ஒன்று பொதிந்திருக்கும் தன்மையே அது. தேர்ந்த கர்நாடக இசை ரசிகர்களே, லய நுணுக்கங்களை போதிய அளவு கவனம் செலுத்தி ரசிக்காத நிலையில், தமிழகத்தின் குக்கிராமங்களில் கூட, தட்சிணா மூர்த்தியைப் பார்த்துவிட மாட்டோமா, அவர் வாசிப்பைக்

கேட்டுவிட மாட்டோமா என்று கூட்டம் நிரம்பி வழிந்தது ஆச்சரியம்தான். இல்லாவிட்டால் கிருஷ்ண கான சபையில் இவர் வாசிப்பைக் கேட்ட பாலக்காடு மணி அய்யர், இவரை உலகின் 'எட்டாவது அதிசயம்' என்று சொல்லியிருப்பாரா?

ஒரு அட்சரத்தில் மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது மாத்திரைகள் வரும் நடைகளே நடைமுறையில் இருக்க, ஒரு அட்சரத்தில் 11, 13 மாத்திரைகள் வரும் வகையில் நடை அமர்த்தி, முதன்முதலில் வாசித்தவர் தட்சிணாமூர்த்தி பிள்ளை தான். எவ்வளவு நேரம், எவ்வளவு வேகமாக வாசித்தபோதும் ஒவ்வொரு சொல்லும் அதற்கு உரிய கனமுடன், தெள்ளத் தெளிவாய் வாசிக்கும் திறன், அவர் தனிச் சிறப்பு என்று, கேட்டவர்கள் இன்றும், அவரை நினைத்து உருகிப் போவதுண்டு.

"இயற்கையிலேயே லயப் பிண்டமாக பிறந்துவிட்ட தட்சிணாமூர்த்தி பிள்ளை, தஞ்சாவூரில் இருந்தபடி, நீடாமங்கலம் சண்முகசுந்தரம் பிள்ளையுடனும், நாச்சியார்கோயில், ராகவ பிள்ளையுடனும் சேர்ந்து, காருக்குறிச்சி அருணாசலம் போன்ற நாகஸ்வர சிகரங்களுக்கு வாசித்த காலத்தை பொற்காலம் என்றுதான் சொல்ல வேண்டும். அவரைப் போன்ற தவில் வித்வான், அவருக்கு முன்னாலும் இல்லை; அவருக்குப் பிறகும் வரப்போவதில்லை," என்கிறார், தட்சிணாமூர்த்தி பிள்ளையுடன் நெருங்கிப் பழகிய, பி.எம்.சுந்தரம். யார்க்கும் எட்டா கற்பனையும், அதை செயல்படுத்திக் காட்டும் ஆற்றலும் கைவரப் பெற்ற அந்த மாமேதை, துரதிர்ஷ்டவசமாய், தனது 42வது வயதிலேயே மறைந்தார்.



# மண்ணின் மகிமையும் அதன் வாசனையும்

**கா.விசயரத்தினம்** (இலண்டன்)

**ப**ரந்து விரிந்த எல்லை கடந்த வெட்ட வெளியான வானத்தில் ஒரு சூரிய குடும்பம் அந்தரத்தில் மிதந்து ஊர்ந்த வண்ணமுள்ளது. அதன்கண் புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, விண்மம், சேண்மம், சேணாகம் ஆகிய ஒன்பது கோள்களும் அடங்கும். சூரியன் சுமார் 456 கோடி 80 இலட்சம் (456,80,00,000) ஆண்டுகளுக்குமுன் தோன்றினான் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பாகும். சூரியன், நட்சத்திரங்கள், ஒன்பது கோள்கள் ஆகிய ஒவ்வொன்றின் ஈர்ப்புச் சக்தியால் இவைகள் வானில் தரித்து நிற்கின்றன.

**எம் மண்ணாகிய பூமி**

இற்றைக்கு சுமார் 454 கோடி (454,00,00,000) ஆண்டுகளுக்குமுன் இயற்கை மாற்றத்தால் சூரியன் வெடித்த பொழுது நாம் வாழும் பூமியானது சூரியனிலிருந்து தெறித்துச் சூரியனைப்போல் எரிந்து கொண்டிருந்தது. நீண்ட காலத்தின்பின் பூமியின் மேற்பரப்பு குளிர்ச்சியடைந்தது. ஆனால் பூமியின் மையப் பகுதி இன்றும் எரிந்த வண்ணம் உள்ளது. இன்றைய ஆய்வின்படி இந்த ஒன்பது கோள்களில் பூமி ஒன்றில் மட்டும்தான் உயிரினங்கள் வாழக் கூடிய காற்று, நீர், வெப்பம் ஆகியவை உள்ளன. எனவே மற்றைய எட்டுக் கோள்களிலும் உயிர் வாழ முடியாது. இந்தவகையில் மற்றைய கோள்களிலும் பார்க்கப் பூமி பல இயற்கை அற்புதங்கள் நிறைந்து அதி சிறப்புற்று விளங்குகின்றது. ப+மியைத் தோண்டத் தோண்ட வற்றாக் கனிமப்பொருள்கள் பொதிந்திருப்பதைக் காண்கின்றோம். பூமியின் 71 சத வீதப் பகுதி உப்பு நீர் கொண்ட கடலால் மூடப்பட்டுள்ளது.

அதி ஆற்றலுடைய வேதியியல் தன்னைத்தானே பெருக்கக் கூடிய மிகச் சிறிய உயிரினமான அணுத்திரண்மத்தை சுமார் 400 கோடி (400,00,00,000) ஆண்டுகளுக்குமுன் பூமியில் முதன்முதலாகத்

தோற்றுவித்து உயிர் மலர்ச்சி முறையை ஆரம்பித்ததாக நம்பப்படுகின்றது.


**நிலக்கரி**

பூமியின் மேற்புறத்திலிருந்து 1,800 மைல் (2,880 கி.மீ) ஆழத்தில் கற்பாறைகள் உருகி மலைக் குழம்பான (lava) நிலையில் காணப்படுகின்றது. இவை சில சமயங்களில் பூமித் தரையைப் பீறிக்கொண்டு பூகம்பமாகவும், எரிமலையாகவும் சீறிப் பாய்ந்து உயிரினங்களையும், நாட்டையும் அழித்து விடுகின்றன. சதுப்பு நிலங்களிலும் பள்ளப் பகுதிகளிலும் வளர்ந்த மரங்;களும், அடர்ந்த காடுகளும் காலப் போக்கில் இயற்கை அனர்த்தங்களால் மண்ணில் புதைக்கப்பட்டு அதன் பார அழுத்தத்தால் நிலக்கரிப் பாறையாக மாறுகின்றது. நிலக்கரி உண்டாவதற்குச் சுமார் 20 கோடி (20,00,00,000) ஆண்டுகள்வரை நாம் காத்திருக்கவேண்டும்.

**பாறை எண்ணெய்**

உலகளாவிய ரீதியில் பூமியடியின் ஆழத்திலுள்ள மலைகளின் வளைமுகடுகளில் பல இலட்ச ஆண்டுகளுக்குமுன் பொறியுட்பட்ட எண்ணெய்க்கும,; நிலத்திலிருந்து வெளிப்படும் வாயுவுக்கும் தேடுதல் நடாத்தப்படுகின்றது. இவ்வாறான எரிபொருள் பாரிய கைத்தொழில்களின் மூலப் பொருளாய் அமைந்துள்ளது.

நீரொழுக்கற்ற கடற் பகுதிகளின் சேறு வண்டல்களுடன் திரண்ட மிருக தாவர உறுப்புக்களிலிருந்து பாறை எண்ணெய் உருவாகின்றது. உயரிய தனித்தன்மை வாய்ந்த நுண்ணுயிரிகள் தமக்குத் தேவையான பிராணவாயுவை உறுப்புக் கழிபொருளிலிருந்து உறுஞ்சிப் பெறுகின்றன. அதனால் உறுப்புக் கழிபொருள் கொழுப்பாகவும், மெழுகாகவும் உருமாற்றம் அடைகின்றது. அவை திரண்ட வண்டல்களால் புதைபடும் பொழுது, அமுக்கமும் தட்பவெப்ப நிலையும் அதிகரித்து பாறை எண்ணெய்யாக உருமாற்றமடைகின்றது. அப்பொழுது அதனைச் சுற்றியுள்ள சேற்றுப் பகுதிகள் களிப்பாறை என்று சொல்லப்படும் பாறையாக மாறிவிடும். பாறை எண்ணெய் உருவாவதற்கு சுமார் ஒரு கோடி (1,00,00,000) ஆண்டுகள் ஆகின்றன.



### பூமியின் விட்டம்

பூமியின் விட்டப்பாதையான 8,000 மைல்களைக்; (12,800 கி.மீ) குடைந்து கொண்டு போவோமாகில் முதலில் மணல், களிமண், கூழாங்கல், நீர், மலை, வாயு, நச்சு வாயு, பெரும் பாறை, மலைக் குழம்பு, மீண்டும் பெரும் பாறை, நச்சு வாயு, வாயு, மலை, நீர், கூழாங்கல், களிமண், மணல் என்ற அமைப்பினைக் காணலாம். இவ்வாறு பூமியின் மேற்பரப்பு மணலால் மூடப்பட்டுள்ளது. நம் காலடியில் உள்ள மண் ஆனது, சிதைவுபட்ட பாறை, பதனழிவுற்ற தாவரம், மிருக உயிர் எச்சம் ஆகியவற்றின் சேர்மமாகும். இச் சேர்மத்தின் மேற் பகுதி உலக விவசாயத் தாவர வளர்ச்சிக்குப் பயன் படுத்தப்படுகிறது.

### மண்ணின் பொருள் வரையறை

மண்ணியல் ஆய்வு, 0.0625 (1,16) மில்லி மீற்ரருக்கும் 2 மில்லி மீற்ரருக்கும் இடைப்பட்ட விட்டமுள்ள வண்டல் துகள்களை 'மண'; என்று வரையறுத்துச் சொற்பொருள் விளக்கமும் தருகின்றது. பாறைத் துண்டுகள் காற்று, மழை, ஆறு ஆகியனவற்றால் உடைக்கப்பட்டு மண் என்ற நிலையடைகின்றது. மண்ணானது செடி, கொடிகளை வளர்க்கக் கூடிய நீர், சூடு, உணவு, காற்று போன்றவற்றைக் களஞ்சியப்படுத்தியும் செடி, கொடியின் வேருக்கு உறுதுணையாகவும் நின்று செயற்படுகின்றது.

வியக்கத்தக்க சிக்கலான ஒரு பொருளாய் மண் இருப்பதினால் அதை நில இயலாளர், வேதியியல் வல்லுனர், நாட்டுப்புற பொருளாதார நூலார், உயிர்நூல் அறிஞர், மண் ஆய்வாளர் ஆகியோர் ஆய்வு செய்தவண்ணம் உள்ளனர். இயற்கையின் பெரும் வியப்புக்குரிய பொருள்களில் மண்ணும் ஒன்றாயுள்ளது என்பது விஞ்ஞானிகளின் கணிப்பாகும். மண் ஒரு நிலையில் நில்லாது, நீர்க்கசிவுச் செயல், உயிரியக்கவியற் செயல் என்பன மூலமாய் மாற்றமடைந்தும் உருமலர்ச்சி பெற்றும் வருகின்றது. மழை காலங்களில் மண்ணிலுள்ள கரைபொருள்கள் கழுவப்பட்டும் கரைந்தும் மண்ணடிக்குள் சென்று விடுகின்றன.

### மண்ணின் பகுப்பு

உலக மண்ணை (1) மணல், (2) வண்டல், (3) களிமண், (4) களிச்சேற்று வண்டல், (5) தூள்மண், (6) சுண்ணம் நிறைந்த மண் என்று ஆறு (06) பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர் மண்நூல் துறையார். உலக மக்கள் தாம் பிறந்த மண்ணின் தரத்தையும், செழிப்பையும்



அறிந்து அததற்கேற்ற பயிரை நாட்டி விவசாயம் செய்து உலகப் பசியைப் போக்கி வாழ்கின்றனர்.

**தொல்காப்பியம்**

இனித் தொல்காப்பியர் மண் கதை பற்றிக் கூறும் பாங்கினையும் காண்போம். திருமால் காக்கும் காடாகிய 'முல்லை' இடமும், முருகவேள் காக்கும் உயர்ந்த மலையாகிய 'குறிஞ்சி' இடமும், இந்திரன் காக்கும் நன்னீர் பொருந்திய வயலாகிய 'மருதம்' இடமும், வருணன் காக்கும் பெருமணல் பொருந்திய 'நெய்தல்' இடமும் மறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று முன்னோர்களால் கூறப்பட்ட பெயர்களாகும் என்று தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." (பொருள் 05)

தொல்காப்பியர் காலத்துக்குமுன் இருந்த நம் பண்டைத் தமிழர்கள் தாம் வாழ்ந்த மண்ணை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனப் பெயரிட்டு நால்வகை நிலங்களாக வகுத்துள்ளமை புலனாகின்றது. இன்னும் காலப் போக்கில் முல்லையிலும் குறிஞ்சியிலும் உள்ள சில பகுதிகள் முறைமுறை திரிந்து, நல்லியல்பு இழந்து, மழை குன்றி, வெம்மையடைந்து, தரிசுபட்ட வனாந்தர நிலத்தைப் 'பாலை' எனப் பெயரிட்டு, அதைக் காக்கக்; 'கொற்றவை' என்ற தெய்வத்தை நியமித்தனர். உதவாத தரிசு நிலமென அறிந்திருந்தும் அதற்குமொரு பெயரிட்டமை நோக்கற்பாலது.

நால்வகையாய் அமைந்த நிலங்கள் பாலை நிலத்துடன் ஐவகை நிலங்களாகவும், ஐந்திணைகளாகவும் பெயர் பெற்றன. இவ்வண்ணம் 'பாலை' பிறந்த கதையைச் சிலப்பதிகாரம் கூறும் பாங்கிது.

"முல்லையும், குறிஞ்சியும், முறைமையின் திரிந்து

நல் இயல்பு இழந்து, நடுங்கு துயர் உறுத்துப்,

பாலை என்பது ஓர் படிவம் கொள்ளும்."

(காடுகாண் காதை. 64 - 66)

காடும் காடுசார்ந்த நிலத்தை முல்லை என்றும், மலையும் மலைசார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும், வனாந்தரமும் அதனைச் சார்ந்த இடத்தை பாலை என்றும், வயலும் வயல்சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடல்சார்ந்த இடத்தை நெய்தல் என்றும் மேற்கண்டோம். இந் நிலங்களின் தன்மையை அறிந்த மக்கள் முல்லையில் காத்து இருத்தலும், குறிஞ் சியில் புணர்தலும், பாலையில் பிரிதலும், மருதத்தில் ஊடலும், நெய்தலில்

இரங்கலும் நிகழ்த்தித் தம் வாழ்வியலைச் சீரும் சிறப்புடனும் நடாத்தி இன்புற்று வாழ்ந்தனர்.

**தமிழ் இலக்கியங்கள்**

இன்னும் மண்ணின் மகிமை பற்றித் தமிழ் இலக்கியங்களான புறநானூற்றில் நிலம் பெயரினும், நிலம்புடை, மலர்தலை உலகம், நாடா கொன்றோ, நிலனே, ஊரே என்றும், அகநானூற்றில் மண்கண், தருமணல், இடுமணல் என்றும், பரிபாடலில் பருமணல், மண்மிசை, நிலன் என்றும், பதிற்றுப்பத்தில் நிலம், மண்ணுடை என்றும், ஐங்குறு நூற்றில் வெண்மணல், நுண்மணல், வார்மணல், நெடுமணல் என்றும், நற்றிணையில் தருமணல், நிலம், நிலந்தாழ் என்றும், மணிமேகலையில் நிலாமணல், நெடுமணல் குன்றம், இடுமணல் என்றும், குறுந்தொகையில் நிலத்தினும் என்றும், திருக்குறளில் நிலம், மண்ணோடு, நிலத்தியல்பால் என்றும், கலித்தொகையில் நிலம்பூத்த, மண்கடல், மணல் நோக்கி என்றும் பற்பல கோணங்களில் நின்று பேசப்படும் பாங்கினைக் காண்கின்றோம்.

**இந்திரனைச் சூழ்ந்த பழி**

ஒரு சமயம் இந்திரன் பல பாவச் செயல்களைப் புரிந்துவிட்டான். அதனால் ஏற்பட்ட பழி பாவங்கள் அவனைச் சுற்றிச் சூழ்ந்து கொள்ள அவன் செயற்பாடுகள் தடைப்பட்டன. இதனால் கவலை கொண்ட இந்திரன் தன் பழி பாவங்களைப் போக்க மரத்தையும், மண்ணையும், பெண்ணையும் நாடிச் சென்று உதவி கேட்டு நின்றான். முதலில் மரத்திடம் போய் தன் பழி பாவங்களை மரத்திலிருந்து பாலாகவும், பிசினாகவும் கழிக்குமாறும,; அதற்காக மரங்களை வெட்ட வெட்டத் தழைக்கும் வரம் தருவதாகக் கூற, மரங்களும் அதற்கு உடன்பட்டன. இரண்டாவதாக மண்ணிடம் போய் தன் பாவத்தை மனிதர் மண்மேற் போடும் கழிவுப் பொருள் மூலம் கழிக்கும் படியும் அதற்காக மண்மேற் போடப்பட்ட கழிவுப் பொருள்கள் தானே உக்கி மண்ணுக்கு எருவாய் மாறும் வரத்தையும், மண்ணை அகழ்ந்து விட்ட பொழுது அது தானாகவே மூடும் வரத்;தையும் தருவதாகவும் கூற, மண்ணும் அதற்கு ஒத்துக்கொண்டது. மூன்றாவதாக இந்திரன் பெண்ணை நாடிச் சென்று, தன் பழி பாவங்களைப் பெண்களின் மாத விடாய் மூலம் கழிக்குமாறும், இதற்காக அவர்கள் கருவுற்றிருக்கும் காலத்திலும் தம் கணவருடன் மருவி வாழலாம் என்ற வரம் தருவதாகக் கூற, அவர்களும்; புன்முறுவலுடன் ஒத்துக் கொண்டனர். இவ் வரத்தால் பெண்களின் வாழ்வியல் பெருகிக் குடும்ப மகிழ்வும் பெறுகின்றனர். இங்கே மண்ணின் மகிமையையும் அதன் வாசனையையும் காண்கின்றோம். அதே நேரத்தில் இந்திரனைச் சூழ்ந்த பழி பாவங்;களும் நீங்கித் தன் செங்கோல் ஆட்சியைத் திறம்பட நடாத்தத் தொடங்கினானென்பது ஓர் ஐதிக வழிவழிச் செய்தியாகும்.

**மண்ணின் செயற்பாடு**

மக்கள் தமக்கு வேண்டாக் கழிவுப் பொருட்களையும், இறந்துபடும் மிருக மனித உடலங்களையும், மனித மிருக எச்சங்களையும், வெட்டி எறியும் மரம் செடி, கொடிகளையும் மண்மேற் போட்டும், மண்ணை அகழ்ந்து புதைத்தும் விடுகின்றனர். இதை மண் ஏற்றுக் கொண்டு அவற்றைச் சீரணித்துப் பசளையாக்கித் தன்னை வளப்படுத்தித் தன்மேல் வளரும் மரம், செடி, கொடி, பயிர்களுக்கு உணவாக்கி அவற்றின் விளைச்சலை அதிகரிக்கச் செய்து, உலகிலுள்ள சுமார் 700 கோடி மக்களுக்கும் உணவளித்து, பசிக் கொடுமை தணித்து, உயிர் கொடுத்தும், மற்றைய உலகச் சீவராசிகள் அனைத்திற்கும் உணவளித்துக் காத்துச் சுமார் கடந்த 400 கோடி (400,00,00,000) ஆண்டுகளாக இத் தொடர்ச் செயலைப் புரிந்தவண்ணம்

உள்ளது. இதனால் மக்கள் மண்ணைத் தம் உயிரினும் மேலாக நேசிக்கின்றனர்.

**சேமப் பெட்டி**

தீ, காற்று, நீர் போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்தும், கள்வர்களிடமிருந்தும் தமது பொருள்களான பணம், பொன், அணிகலன்கள், செல்வம், முக்கிய ஆவணங்கள், பத்திரங்கள் ஆகியவற்றைக் காப்பாற்றுவதற்காக இவற்றை மண்ணில் புதைத்துப் பின் வேண்டிய நேரத்தில் எடுத்துப் பாவிக்கின்றனர். சில நாட்டார் தம் நாட்டின் வரலாற்றுப் பொக்கிசங்களைப் பேழையில் வைத்து மண்ணில் மிக ஆழத்தில் புதைத்து விடுகின்றனர். இவை மண்ணில் மறைந்து ஆயிரமாயிரம் ஆண்டுகள் சென்றாலும் மங்காது சேமப் பெட்டியில் வைத்ததுபோல் சேமித்துக் காப்பாற்றப்படுகின்றன.

நம் கிராமியப் பெண்கள் சமயலறையின் அடுப்பங்கரையைத் தோண்டித் தம் நகைகளையும், பணத்தையும் அதில் வைத்து மண்ணால் முடி, அதை மெழுகி, அதன்மேல் அடுப்புகளை வைத்துச் சமையல் செய்வர். இன்னும் குடங்கரையிலும் இவற்றைப் புதைத்துக் காப்பாற்றி வருகின்றனர். இவ்வாறான அடுப்பங்கரையும், குடங்கரையும் சமசியப்படாத இடங்களாகும். இம் மண்ணின் பெருமையை அந்த மக்கள்தான் நன்கு அறிவர்.

**முடிவுரை**

பூமியின் மேற்பரப்பில் அமைந்த மண்தான் பூமியின் உயிர். அம் மண்தான் மனிதனின் உயிர். மனிதன் மண்ணில் பிறந்து, உருண்டு, பிரண்டு, தவழ்ந்து, எழுந்து, விழுந்து, நடந்து, ஓடி விளையாடி, எழுதிப் படித்து, கொத்தி, உழுது, பயிரிட்டு, விவசாயம் செய்து, படுத்து, உறங்கி, பகல் இரவென்று பாராது தம் வாழ்நாள் முழுவதையும் மண்ணுடன் ஒட்டி உறவாடிப் பிறந்த அதே மண்ணில் மடிந்து மண்ணாகிப் போகின்றான். எந்த மண்ணை நேசித்தானோ அதே மண்ணில் அவன் கதை முடிகின்றது. ஆனால் அவன் மண்மேல் வாழ்ந்த நாட்கள் இன்பகரமானவை. இதுதான் மண்ணின் மகிமை. அவன் இறந்துபட்டது பெரிதல்ல. அவன் மண்ணில் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் கேள்வி? அவன் மண்ணுடன் இணைந்து மாண்புடன் வாழ்ந்தான் என்பதுதான் அதன் விடை.

அவன் இரவில் மண்மேல் படுத்து உறங்கினான். வயலில் வேலை செய்து களைப்புறும் பொழுதும் அருகிலுள்ள மரநிழலில் வெண் மணல்மேல் படுத்துத் தூங்கினான். அவனை மண்ணின் ஈர்ப்புச்சக்தி நோய் நொடி வராது காப்பாற்றியது. 'மண் சிகிச்சை' என்ற முறை அந்நாட்களில் மலிந்து காணப்பட்டது. மகாத்மா காந்தி அவர்களும், மறைமலை அடிகளாரும் மண் சிகிச்சை முறைகளைக் கைக்கொண்டு பலனும் கண்டனர்.

இன்று நம்மவர் அநேகர் நிலத்தில் படுப்பதில்லை. நிலத்திலிருந்து மூன்று, நான்கு அடி உயரத்தில் கட்டில் மெத்தைகளில் சொகுசாகப் படுத்து உறங்குகின்றோம். விஞ்ஞானம் நம் திசையை மாற்றிவிட்டது. நாமும் புதுப் புது நோய்களால் பீடிக்கப்பட்டு வாடி வதங்குகின்றோம். இதற்கொரு பரிகாரம் அவசியம் நாடல் வேண்டும்.

நம் பண்டைத் தமிழர்கள் தமிழ் மண்மேற் காதல் கொண்டு அதன் தன்மை, தரம், மகிமை, வாசைன ஆகிய இயற்கை நிலைகளை உற்றறிந்து அதற்கமைந்த வாழ்வினை அமைத்துப் பெருவாழ்வு வாழ்ந்து காட்டி அதன் எச்சங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர். நாமும் அவ்வண்ணம் மண்ணோடு சேர்ந்து அவர் வழி நின்று, அற வழி நாடிப் பெருவாழ்வு காண்போம்.


பகுக்

# கவிதை

- நா.கணபதி (கனடா)

அதிகாலை எழுந்திருந்தேன்
கவிதை ஒன்றுபுனைய வென்று
கவிதை புனைவதற்கு
கருப் பொருள் தோன்றாமல்

கவலையுடன் இருக்கையிலே
வந்தான் என் நண்பன்
பெயரளவில் பெயர் பெற்ற
புதுக் கவிதைபுனை கவிஞன்.

'கப்பல் கவிழ்ந்தது போல்
கவலை யுடன் இருக்கின்றாய்
காரணம்தான் என்ன' என
காரணத்தை நான் கூற

வாய் விட்டுச் சிரித்துவிட்டு
வந்த நண்பன் கூறுகிறான்
ஒரு சிலற்கு மட்டும்
தெரிந்த தொன்று சொல்லுகிறேன்.

யாருக்கும் சொல்லாதே
உன்னளவில் வைத்துக் கொள்
கருவின்றிப் பொருளின்றி
கவிபுனைய வென்றன்றே
புதுக் கவிதை வந்துளது.

இதை அறியாத நீயுமொரு கவிஞனா?
புதுக் கவிதை என்பதென்ன?
கருவில்லாப் பொருளில்லா
கவிதையன்றோ புதுக்கவிதை.

அண்மையிலே பலர் புகழ்ந்து
பரிசு பலபெற்ற புதுக்கவிதை
புகழ் பெற்ற கவிஞன் புனைந்ததிது
கூறுகிறேன் கேட்டுப்பார்.

"நீண்ட நாட்களாய் ப+ட்டியிருக்கிற வீடு
இராப்பகலாய் கீச்சுக்கீச்சென்டு ஒன்றை
ஒன்று துரத்தி ஓடித் திரியுதுகள்
சாப்பாடுதேடி விருந்தினராய் இருந்தஎலிகள்."
(ம.ப.பா)

2

எப்படி கவிதை?
நல்லதோ கெட்டதோ
அருமை என்றொரு
பிரபலம் சொன்னால்
அன்றிலிருந்து
நீ கதைப்பதே கவிதைதான்.

வரம்புகள் இல்லாத திறந்த வெளி
புதுக் கவிதை
திறந்த வீட்டுக்குள்
புகுந்திடும் நாய்போல

விரும்பிய திசையில்
விரும்பிய விசையில்
எங்கும் போகலாம்
எதையும் நக்கலாம்.

புனைபவர் பதிப்பவர்
படிப்பவர் அனைவற்கும்
பொருளில்லை என்பது புரியும்
ஆயினும் சொன்னால் சொல்பவர்.

மர மண்டைப் பட்டம்
பெறுவர் என்பதனால்
ஆகா ஓகோ அருமை அருமை
என்று புகழ்ந்து தாளம் போட்டு
யாவும் புரிந்தவர் போல நடிப்பர்.

■

## கட்டடக்காடு

# காதல் ஓவியமான கைக்குழந்தை

பாகம் - 8



மனோரஞ்சிதம் ரீச்சர் வீட்டிற்கு தொலைபேசியில் பேசிக் கொண்டு இருந்தார். யாழ்ப்பாணம் கொட்டடி வில்லூன்றிப் பிள்ளையார் கோயில் கொடியேறி திருவிழா நடந்து கொண்டு இருப்பது பற்றிப் பேச்சு போய்க் கொண்டு இருந்தது. சாமி வெளிவீதி சுற்றி வருகிறதாம். தெற்கு வீதியில்தான் ரீச்சரின் வீடு இருக்கிறது. பூசை ஆயத்தங்கள் 'போன்' மூலம் சொல்லிக் கொண்டு இருக்கிறார் ரீச்சர். "கும்பம் வைச்சாச்சோ? கற்பூரம் வைச்சிருங்கோ?" கணவர் சரவணபவன் ஆலாய் வீட்டிற்கும் வீதிக்கும் இடையில் கையில் போனுடன் பறந்து கொண்டு இருக்க வேண்டும். ஆனால் ரீச்சர் இங்கே வட்டக் கொட்டிலில் இருந்து நெறிப்படுத்திக் கொண்டு இருந்தார்.

பின்னர் எல்லோரும் அகழ்வு மையம் நோக்கி புறப்பட்டனர். அன்று வானம் 'கும்' என்று இருட்டி காலையிலேயே மழை வரும் போல் இருந்தது. இருப்பினம் அதை யாரும் சட்டை செய்யவில்லை. அந்தக் காட்டில் எப்போதும் மழை சிலு சிலு என்று தூறியபடியே இருக்கும். ஆண்டின் எல்லாக் காலத்திலும் சிறுமழை வீழ்ச்சி இருந்தாலும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். இவற்றைக் கணக்கில் எடுத்துத் தான் 'மாசி' பங்குனியைத் தேர்வு செய்து இந்த வேலையை ஆரம்பித்தார்கள். ஆனாலும் அவ்வப்போது மழை எல்லாவற்றையும் கெடுத்துவிடும்.

மழை பலமாகத் தூற ஆரம்பித்தது.



ஒருவர் மற்றவர் முகத்தைப் பார்த்தப்படி யார் முதலில் 'இனி முடியாது' என்று சொல்லுவார்கள் என்ற ஏக்கம் அவர்கள் ஒவ்வொருவர் கண்ணிலும் குடி இருந்தது. அன்று தலைமை வகிக்கும் நிபுணர் – லிமாவிற்கு ஏதோ அலுவலாய் சென்றுவிட்டார். எனவே அவருக்க அடுத்த நிலையில் இருந்த அதிகாரி சற்று தயங்கியபடியே நின்றார். ஒருவேளை மழை நின்று விட்டால் வேலை பாழாய்ப் போய்விடும் என்ற ஏக்கம் ஒருபக்கம், நல்ல ஒரு செய்தி அகழ்வின் மூலம் கிடைத்து அதைத்தான் அறிவித்தால் நன்றாக இருக்குமே என்ற ஆசை ஒரு பெரிய பெரிய துளிகளாய் விழ ஆரம்பித்தது. முடிவில் அவரும் "சரி எல்லோரும் வாருங்கள்" என வண்டிக்குள் இருந்தவாறே கையை காட்டினார். அனைவரும் மீண்டும் தங்குமிடம்

நோக்கிப் பயணித்தனர்.

அந்த அகழ்வு மையம் முன்னர் நல்ல எண்ணெய் வளமுள்ளதாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இப்போது அதை மூடி விட்டார்கள். ஆனால் எண்ணெய்யை சுத்திகரிப்பு ஆலைக்கு அனுப்புவதற்காகப் பாரிய குளாய்கள் நிலத்திற்கடியில் தோண்டி புதைக்கப்பட்டு அதன் அருகில் மேலும் காடுகள் வெட்டப்பட்டுப் போக்குவரத்திற்கு எனப் பாதை போட்டு இருந்தார்கள்.

மண்ணில் தாக்கப்பட்ட குளாய் நிலத்திற்கு மேல் மட்டத்திலும் ஆங்காங்கே தெரிந்தது. வண்டி கொட்டகையை அடைந்தது. சீனுவுக்கு அவள் புலியுடன் இருந்து காப்பாற்றியதில் இருந்து அவள் இல்லாமல் உலகமே இல்லை என்றாகி விட்டது.

புலி வீரோ மீது பாய முனைந்த போது ஈட்டியைத்தான் எறிந்தாள். ஆனால்அதுவே தன்னைத் தாக்க முனைகையில் தானே அதனுடன் சண்டை போட்டாள் என்பது மீண்டும் மீண்டும் அவனை கற்பனை உலகிற்கு அழைத்துச் சென்றது. அது மட்டுமா? அவள் முகத்தை வேறு பார்த்துவிட்டான். அழகான முகமாக இருக்க வேண்டும். ஆனால் அதன் மேல் தான் ஒருவகை கரியை பூசி இருந்தாள். இடையே செம்மஞ்சள் நிறத்தில் கோடு வேற போட்டு இருந்தாள். வேட்டைக்கு அல்லது வேறு தேவைக்காக காட்டிற்குள் நுழையும்போது இவ்வாறு பூசிக்கொள்வார்களாம்.

காரணம் இவர்களின் மனிதவாடையை சில மிருகங்கள் மோப்பம் பிடித்து விடாமல் இருக்கவும், மரத்தோடு மரமாகி மண்ணோடு மண்ணாகி மறைந்து இரை தேடவும் அது உதவுமாம். மேலும் பரம்பரை பரம்பரையாகச் சிலவகை அடையாளங்களையும் குழுவுக்குக் குழு பேணி வருகிறார்களாம். மிகவும் குறும்புத்தனம் கொண்ட கூர்மையான கண்கள். கூரிய மூக்கு, காதிலோ, கழுத்திலோ ஏதும் போட்டிருக்கவில்லை. அவளின் நீண்ட கூந்தல் உடலின் அரைவாசிப் பங்கை மூடியே வளர்ந்திருந்தது. முகத்தையும் தெளிவாகப் பார்க்க முடியாதப்படி அவை அடிக்கடி காற்றில் ஆடி மூடின. உறுதியான உடற்கட்டு புலியைக் கண்டு பயத்தில், அவளை ரசிக்கவோ, ஏதும் பேசவோ கூட முடியாமல் வாய் அடைத்து நின்ற வேளையில், கண்ட காட்சிகளில் இருந்து இப்போது சீனு அவளை மொழிபெயர்ப்பு செய்து கொண்டு இருந்தான். அவளுடன் பேச வேண்டும் என்ற ஒரே நோக்கில் பலமுறை முக்கியமல்லாத பல சொற்களைக் கூட கற்றுக் கொண்டு அவ்வப்போது அவற்றை வீரோவுடன் பேசி சீர்செய்தும் வந்தான். இவன் தனது மொழியைப் பயில்வதும், அதனாலேயே பேச முயல்வதும் கண்டு வீரோவுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. தானாகவே முன் வந்து சில விடயங்களைச் சொல்லித் தந்தார்.

மதியம் திரும்பிக் கொணடு இருந்தது. மழை ஓய்ந்து வெயில் எறித்துக் கொண்டு இருந்தது. சீனு அரையும் குறையுமாக மதிய உணவை வாயில் போட்டு விழுங்கி தண்ணீயையும் குடித்துவிட்டு நதிக்கரைக்கு ஓடினான். நதியில் நீர் மட்டம் சற்று அதிகமாகவே இருந்தது. நீரும் சற்று மண் கலந்த மங்கலாக ஓடிக் கொண்டிருந்தது. வெய்யில் நனைந்த இலைகளில் பட்டு தெறித்தால் சூடாகவே இருந்தது. பழைய இடத்திற்கு வந்ததும் வராததுமாய் மேலே அந்தக் கனி இருக்கிறதா? எனப்பார்த்தான். என்ன ஆச்சரியம் அந்தப் பழத்தைக் காணவில்லை. கனி காணாமல் போய்விட்டது. இல்லை அவளேதான் பறித்துவிட்டாள். உடலின் எடை குறைய உள்ளே ஆசைகள் பெருகிய. மனம் படபடக்க இதயம் மெல்ல சிறகு விரித்தது. துள்ளினான், குதித்தான், தூரத்து வானத்தை தூசு தட்ட முனைந்தான் – என்ன ஆச்சு இவனுக்கு. இருந்த ஒரு பழமும் இல்லாமல் போய்விட்டது. இனி அவள் இந்தப் பக்கமே தலை வைத்தும் படுக்கமாட்டாள். ஆனால் இந்த லூசோ எகிறிப்பாய்ந்து திரியுது. நியும் ஒரு அம்மையோ? இன்னும் 22–ல் என்னைப் பெற்ற பெண்மையோ? எனக் கவிதை வேற.

இப்போது – அவள் – அந்த கனியுடன் இவன் இணைத்து வைத்த காதல் கடிதத்தைப் படித்திருப்பாள். 'கேட்கிறவன் கேனையன் என்பதால் எருமை மாடு ஏரோப்பிளேன் ஓட்டிச்சு' என்றானாம் ஒருவன். அதுபோல் அல்லவா இந்தக் கதை இருக்கு. கற்காலப் பெண்ணுக்கு இவர் 'காதல் கடிதம்' எழுதினாராம். அவள் படித்து விட்டு இவருக்கு வாடி விலாசத்திற்கு பதில் எழுதிப் போடுவாளாம்! அந்தக் குஷியில்தான் இவர் குதிக்கிறாராம்.

அப்படி என்னதான் நடத்திவிட்டான். இல்லை வேற ஏதாவது வேலை செய்திருப்பானோ? ஆம் வாசிக்கத்தான் தெரியாது பார்க்கவும் அவளுக்குத் தெரியாதா என்ன?

நல்ல வெள்ளைத்தாளில் சிவப்புச் சேட்டுப்போட்டு ஒரு உருவம். அது இவனாம். பின் வில்லுடன் ஒரு கருங்கூந்தல் மாது அவளாம். சரி காதலுக்கு என்ன படம் கீறி இருப்பான்? இதயம் அதே வில்லில் இருந்து பாய்ந்த அம்பு, அம்பு துளைத்த இதயம், இதன் அர்த்தம் அறிய பள்ளி சென்றாளா? இல்லை, இதய வடிவம் அறிய பரிசோதனைக் கூடம்தான் போனாளா? அதிலும் அம்பு துளைத்த இதயத்தை பார்த்துவிட்ட இவனுக்கு அம்பு எய்யாமல் இருந்தாலே பெரிய விசயம். நீ என்ன அம்பு எய்து கொல்ல நான் என்ன புளியங்காயா பறிப்பேன் என எண்ணினால் கதை கந்தல்.

அந்த இருவரும் ஒரு பாதையில் நடந்து செல்கிறார்கள். அவர்கள் இருவர் கையையும் பிடித்தபடி நடுவில் ஒரு சிறு பெண் பிள்ளை நடந்து செல்கிறது. கட்டிடங்கள் நிறைந்த நகரத்தை நோக்கி மூவரும் செல்வதாக அழகாக அதை வரைந்து, ஒரு சிறு மெழுகு பையில் போட்டு ஒட்டி, அதை அக்கனியின் பக்கத்தில் நன்றாக உரிந்து விடாதபடி ஒட்டி வைத்திருந்தான். எளிதில் நீர் புகுந்து விடாதபடியும் இருக்குமாறு பார்த்துக் கொண்டான்..

அந்த மடல் இப்போ அவள் கையில் இருக்கும். சிவப்பு சேட் கோட்டது நான் என்று நிச்சயம் இனம் கண்டு கொள்வாள். இரண்டாவது முறை அவளைச் சந்தித்த போதும் அதே சட்டைதானே போட்டுப்போய் புலியிடம் மாட்டினான். ஒருவேளை அவளுக்கு ஆண் குழந்தை பிடிக்குமோ? வேண்டுமானால் கற்பனை செய்து கொள்ளட்டும். எத்தனை பிள்ளைதான் நான் கீறுகிறதாம்?

இப்படி ஒரு விசித்திரமாகக் காதல் தெரிவிப்பான் என– அவள் இல்லை – எவருமே நினைத்திருக்க முடியாது. இது எங்கு போய் முடியப்போகிறதோ என்ற பெரும் ஆவல் ஒருபுறம், காதல் அவனை தன் முழு அவஸ்தையோடும் பீடித்துக் கொண்டது. 'சொல்லவா, சொல்லவா? ஒரு காதல் படம், சொந்தம் நீ அல்லவா? என் காதல் பழம். பழம் தூது போன களம் பற்றி எண்ணிப் பாட்டு பலமாகி இருந்தது. இடை, இடையே கதை வசனம், ஒருவேளை என்னடா பழத்தின் மேல் ஒரு பட்டை என்று பழத்தையும் தூக்கிப்போட்டுவிட்டு போய் இருப்பாளா? இல்லை, இல்லை அவள் வீரப்பெண், எதையும் எதிர்கொள்ள நினைப்பாளோ? தவிர, புற முதுகு காட்டி ஓட மாட்டாள். நிச்சயம் இதை பிரித்துப்பார்ப்பாள்.

மீண்டும் பாட்டு கட்டம் இல்லை. இப்போ நடனம், துள்ளித் துள்ளி இலைகளில் இருந்த மழை நீரை எல்லாம் தன் தலையில் கொட்டிக் கொண்டான். மனம் அவள் பின் போக கால்கள் அவனை வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தன. யாரோ ஒருவர் நான்காவது முறை 'தலை நனைஞ்சு இருக்கு, குளித்து விட்டு வா?' என்றது இவனுக்கு முதல் முறையாகக் கேட்டது.

துடைப்பதற்கு துவாய் ஒன்றைக் கையில் ஏந்தியபடி விக்டோரிய வாசலில் நின்று கொண்டு இருந்தாள். சொரிந்த தூறல் சோவென பெய்தது. அவளையே பார்த்துக் கொண்டு கொட்டிக் கொண்டு இருந்த மழையில் நின்றான். அவன், இதயம் மட்டும் பலமாக அடித்துக் கொண்டு இருக்கின்றது

என்பதை அவனின் மூச்சுக் காற்றில் முத்தமிட்ட மழைநீர் முகம் குப்புற விழுந்து ஓடிய வேகம் காட்டிக் கொடுத்தது.

கொட்டகையின் உள்ளே தர்மராஜா மாஸ்டர் நல்ல கம்பளியினால் இறுக்கமான மேல் அங்கி போட்டுக் கொண்டு, சொகுசான அந்தப் பஞ்சு இணை கதிரையில், சாய்ந்து இருந்தபடி இளம் சூடான தேனீரை குடித்துக் கொண்டு வறுத்த கச்சான் கடலையை (நிலைக்கடலை) இடை, இடையே கொறித்தபடி வெளியே பொழிந்து கொட்டும் மழையை அழகாக ரசித்துக் கொண்டு இருந்தார்.

மாணவர்கள் எல்லோரும் குறுந்தகட்டின் உதவியுடன் தமிழ் திரைப்படம் பார்த்துக் கொண்டு இருந்தனர். நேரம் மாலை ஆறு மணிக்கு மேல் ஆகிக் கொண்டு இருந்தது. மயான நெருப்பின் புகை போல் மேற்கே கரும்புகை மண்டலத்தின் உள்ளே கருகிக் கொண்டு இருந்தான் பகலவன். காற்று ஊ.... ஊ... எனப் பலமாக வீசியது. வட்டக் கொட்டிலில் வைக்கப்பட்டிருந்த நெகிழிக் (பிளாஸ்ரிக்) கதிரை காற்றில் அடித்துச் செல்லப்பட்டு கம்பி வேலியில் சிக்கிக் கொண்டது. நாய்களுக்கு உணவு போடும் தட்டுகள் பறக்கும் தட்டுக்ள் ஆகியன. காட்டின் நடுவே ஒரு விதக் கலக்கம் குடி ஏறியது. காற்று பலமாகினால் அவர்கள் வீடுகள் கூட இரையாகலாம் என்று ஒருவகை பயம் அவர்கள் மனங்களில் புகுந்து கொண்டது. மழையோ கொட்டோ கொட்டு எனக் கொட்டியது. மின்னல் அவ்வப்போது கண் இமைகளை அடித்துச் சாத்த இடி இதயத்தில் இறங்கியது.

விக்டோரியா இன்னும் கையில் துவாயுடன் வாசலில் நின்று கொண்டிருந்தாள். சீனு மண்ணை தாண்டி மழையில் மிதந்து கொண்டு துள்ளினான். அந்த பெண் முற்றும் முழுதாக இவனை ஆக்கிரமித்து ஐம்புலன்களையும் அபகரித்துக் கொண்டாள். ஏதும் இல்லாத ஏதிலியாய் எகிறிக் குதித்தான். கொட்டகை உள்ளே இருந்து ஒரு பாடல் துள்ளி வந்து நனைந்த காதில் நுளைந்தது. இசை கேட்டு தானும் ஆடினான், பாடினான்.

ஒத்தச் சொல்லால என் உசிர எடுத்து வைச்சுப்புட்ட இரட்டை கண்ணால என்னை கொன்னாடா – ஆடுகளம் பாடல ஆடி வந்தது.

ஒற்றைக் கனியால் என் உலகெடுத்து வைச்சுப்புட்டா மற்றக் கனியால் எண்ணைக் கொன்னாடா. கவிஞர் ஜெகதாசின் வரிகளில் ஒன்றை உல்டா பண்ணினான்.


நிலம் சகதியாக துள்ளியவன் விழுந்து உருண்டான். எல்லாம் அவள் செயல் அவள் இல்லை என்றால் இப்படி ஒரு அணுவும் அசைந்திருக்காது.

விசயம் ஏதும் புரியாமல் விக்டோரியா வாசலிலே நின்று சற்றே அவளும் நனைந்து விட்டாள். ஆனாலும் இவ்வளவு சந்தோசமாகி அவள் சீனுவை பார்த்ததே இல்லை.வியப்போடு விழி நிறைய அவனை ரசித்தபடி நின்றாள். இவளைப் பார்த்து வேற அந்தப்பாட்டை பாடுகிறான். சீனு மேல் அவளுக்கு ஒருவித நல்லெண்ணம் இருந்தது. சூரு வகையில் அந்த நல்லெண்ணத்திற்கு களங்கம் ஏற்பட்டு சிறிது சிறிதாக நல்லெண்ணம் பொல்லாத எண்ணமாக மாற முனைந்தது.எதையும் பெரிது படுத்தாமல் அறிவுப்பூர்வமாக அணுகும் அவன், ஆச்சரியம் அறியாமையின் ஒருவித வெளிப்பாடுதான் என நம்புவனுக்கு இன்று என்ன நடந்தது. கூன்? இப்படி தலைகால் தெரியாமல் தரையில் பிரண்டு தண்ணீரில் ஊறுகிறான். அவன் களைத்துவிட மழையும் சளைத்து சற்று ஓய்ந்து தூறிக்கொண்டு இருந்தது. விக்டோரியா தொண்டை கிழிய கத்திய சீனுக்களில் ஒன்று மட்டும் அவனுள் நுழைந்து அவனைத்தான் சீனு என அங்கே அழைப்பார்கள் என்பது தெரிய வரவே கையில் இருந்த சேற்றைத் தண்ணீர் தொட்டியில் கழுவி விட்டு வந்து, துவாயை அவளிடம் இருந்து வேண்டிக் கொண்டு குளியல் இடம் நோக்கி நடந்தான்.

மழை முற்றாக விட்டுவிட்டது. இருட்டும் முற்றாக இருட்டி விட்டது. காற்றின் அகோரத்தைக் கணக்கில் எடுத்து காப்பாளர்கள் முன் எச்சரிக்கையாக எரிந்து கொண்டு இருந்த மின் விளக்குகளை அணைத்து விட்டிருந்தார்கள்.

சீனு குளித்துக் கொண்டு இருந்தான். அரைவாசி தொட்டி நீர் முடியும் வரை குளித்தவனுக்கு ஒரு சந்தேகம். தொட்டியிலே நீர் அரைவாசிதான் இருந்ததாக, அட இரண்டு வாளியோடு முடிந்துக் கொண்டு போக நினைத்தோமே என்று மீண்டும் அள்ளிக் குளித்தான். தொட்டியில் நீர் முடிந்தாகிவிட்டது. குளிக்க முன் கழற்றி கீழே போட்ட உடுப்புகளை காலால் தடவி எடுத்து ஒருகரையில் வைத்தான். அந்த சிவப்பு சேட்டும் அவற்றில் ஒன்றாக இருக்க, அதில் கவனம் இல்லாமல் இருக்குமா என்ன? கும் இருட்டு குடி கொண்டு இருந்தது. துவாயையும் எடுத்துக் கொண்டு கொட்டகை வாசல் வரை வந்துவிட்டான். கொட்டகையின் கதவை திறந்தான். வெளிச்சத்தோடு மிருதுவான இளம் வெப்பமும் விட்டின் உள்ளே இருந்து வெளியேறி இவனின் அடி வயிற்றின் மேல் சுட்டது. அடி வயிற்றில் இடி விழுந்தவன் போல அடித்துச் சாத்தினான். நல்லவேளை யாரும் பார்க்கவில்லை என்றபடி தோளில் இருந்த துவாயை இடுப்பில் கட்டினான். அதன் பின்னரும் மனம் திக், திக் என்று அடித்துக் கொண்டிருந்தது. சற்றுநேரம் இருட்டிலே நின்றான். உள்ளே இருந்து காந்தன் “சீனு....சீனு... எவ்வளவு நேரமடா குளிப்பாய்?” என்று கத்திய குரல் கேட்டு, ‘இதோ வந்திட்டேன்’ என்றபடி மீண்டும் கதவைத்திறந்து அரையில் கட்டிய துவாயைப் பார்த்தபடியே தன் அறைக்குள் புகுந்தான்.





# தொல்காப்பியர் காட்டும் ஆறறிவு உயிர்கள்


சூரிய குடும்பத்திலுள்ள ஒன்பது கோள்களில் பூமிக் கோளில்தான் உயிரினங்கள் வாழ்கின்றன் வாழவும் முடியும். மற்றைய எட்டுக் கோள்களில் உயிரினங்கள் வாழமுடியாது. பூமிக்கு இஃது ஒரு சிறப்பு. இதனால் பூமியானது ஓர் உயிர்ப் பூவுலகாய் மிளிர்கின்றது. பூமியில் உயிரினங்கள் இல்லையெனில் அஃது ஒரு வறண்ட வனாந்தரமே. உயிருள்ள ஒன்றுதான் பிறக்கவும், இறக்கவும் முடியும். உயிரில்லையெனின் பிறப்பும், இறப்பும் இல்லை. மனிதன் மட்டும்தான் பிறக்கின்றான், இறக்கின்றான் என்றில்லை. ஓரறிவுள்ள புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகியவற்றிலிருந்து ஆறறிவுள்ள மனிதன்வரை பிறப்பதும;; இறப்பதும் நியதி. உயிர் தனித்து வாழாது. உடலும் தனித்து வாழாது. உயிர் நிலைத்திருப்பின் அதற்கு ஓர் உடல் வேண்டும். உடலுக்கும் ஓர் உயிர் வேண்டும். உயிருக்குச் சாவில்லை. உடலுக்கு உயிர் பிரிந்ததும் சாவுண்டு.

புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகியனவுக்கு உயிர் இல்லை என்று கூறுவோர் பலர் இருந்தகாலமது. இவைகள் நடமாட்டமற்று ஒரேயிடத்தில் நிலைத்திருந்த காரணத்தால் இவைகளுக்கு உயிர் இல்லையென்ற முடிவுக்கு வந்தனரா போலும். பூமியானது உருண்டை இல்லையென்றும், அது தட்டைதான் என்று கூறுபவர்களும்

ஆறறிவுடைய விலங்குகளும் பறவையும் ஒரு சில உள்ளன என்று தொல்காப்பியனார் சூத்திரமமைத்துக் காட்டியுள்ளார். அவையாவன கிளி, குரங்கு, யானை என்பனவாம்.

இந்தியத் தாவரவிஞ்ஞான மேதை யெகதீஸ் சந்திர போஸ் (Jegadish Chandra Bose, 30.11.1858 - 23.11.1937) அவர்கள் தாவரங்களுக்கு உயிர், உணர்வு, அறிவு உள்ளதென்பதை நிரூபித்துக் காட்டிப் பரிசும், பாராட்டும் பெற்றுக்கொண்டார்.

ஆனால் இதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே தொல்காப்பியனார் (கி.மு.711) தாவரத்தின் உயிர், உணர்வு, அறிவு பற்றியும், மற்ற உயிரினங்களின் அறிவு, உணர்வு, உயிர் பற்றியும் விபரமாக எடுத்துக் கூறிச் சூத்திரங்கள் அமைத்தமை காண்க.



இன்றும் இருக்கத்தான் செய்கின்றனர். விஞ்ஞான அறிவு எல்லா மக்கள் மனங்களையும் போய்ச் சேரவில்லை என்பது ஓர் உண்மைச் செய்தியாகும்.

இந்நிலையில்தான் இந்தியத் தாவரவிஞ்ஞான மேதை யெகதீஸ் சந்திர போஸ் அவர்கள் தாவரங்களுக்கு உயிர், உணர்வு, அறிவு உள்ளதென்பதை நிரூபித்துக் காட்டிப் பரிசும், பாராட்டும் பெற்றுக்கொண்டார். இதன் பின்புதான் மக்களும் புல், பூண்டு, செடி, கொடி, மரம் போன்றவற்றுக்கும் உயிர் உண்டென்ற நிலைப்பாட்டுக்கு வந்தனர் என்று கூறலாம்.

ஆனால் இதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தொல்காப்பியனார் தாவரத்தின் உயிர், உணர்வு, அறிவு பற்றியும், மற்ற உயிரினங்களின் அறிவு, உணர்வு, உயிர்; பற்றியும் விபரமாக எடுத்துக் கூறிச் சூத்திரங்கள் அமைத்தமை காண்க. அதில் கீழ்க்காட்டிய சூத்திரத்தில் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர், ஆறறிவுயிர் ஆகிய ஆறு வகையான உயிரினங்களில் உலகத்து எல்லா உயிரினங்களையும் அடக்கிக் கூறப்பட்ட சிறப்பினையும் காண்கின்றோம்.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

இரண்டறி வதுவே அதனொடு நாவே

மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே


நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றொடு மனமே

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே." (பொருள். 571)

ஓரறிவு உயிராவது உடம்பினாலே அறிவது. ஈரறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் அறிவது. மூவறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் அறிவது. நாலறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினாலும் அறிவது. ஐந்தறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினாலும் செவியினாலும் அறிவது. ஆறறிவு உயிராவது உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும்



கண்ணினாலும் செவியினாலும் மனத்தினாலும் அறிவது. இவ்வகையால் உயிர்கள் ஆறு வகை ஆயின.

மேலும்; தொல்காப்பியனார் ஓரறிவிலிருந்து ஆறறிவுக்குரிய உயிரினங்களின் பெயர்ப் பட்டியலையும் தனித்தனியே தந்துள்ள சூத்திரச் சிறப்பினையும் காண்போம்.

1. ஓரறிவு உயிர்கள்

"புல்லும் மரனும் ஓரறி வினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

*(பொருள். 572றி)*

2. ஈரறிவு உயிர்கள்

"நந்தும் முரளும் ஈரறி வினவே


பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."

*(பொருள். 573)*

3. மூவறிவு உயிர்கள்

"சிதலும் எறும்பும் மூவறி வினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."



(பொருள். 574)

4. நாலறிவு உயிர்கள்

"நண்டும் தும்பியும் நான்கறி வினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."
(பொருள். 575)

5. ஐயறிவு உயிர்கள்

"மாவும் புள்ளும் ஐயறி வினவே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."
(பொருள். 576)

6. ஆறறிவு உயிர்கள்

"மக்கள் தாமே ஆறறி வுயிரே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே."
(பொருள். 577)

புல், மரம், கொட்டி, தாமரை ஆகியவை ஓரறிவு உடையனவென்றும் நந்தும், முரளும், சங்கு நத்தை, அலகு, நொள்ளை, சிப்பி, கிளிஞ்சில், ஏரல் என்பன ஈரறிவு உடையனவென்றும் சிதலும், எறும்பும், அட்டை முதலியன மூவறிவினை உடையனவென்றும் நண்டு, தும்பி, ஞிமிறு, சுரும்பு போன்றவை நான்கு அறிவினை உடையனவென்றும் நாற்கால் விலங்குகள், பறவைகள், பாம்பு, மீன், முதலை, ஆமை என்பன ஐவகை அறிவினை உடையனவென்றும் மக்கள், தேவர், அசுரர், இயக்கர், முதலாயினார் ஆறறிவு உயிர்களென்றும் கூறி உலக உயிரனைத்தையும் ஆறு வகையில் அடக்கிக் காண்பித்தவர் தொல்காப்பியர்.

இவற்றை ஊன்றிக் கவனித்தால், தொல்காப்பியர் காலத்தில் தாவரவியல், உடற்கூற்றியல், பறவையியல், விலங்கியல் போன்ற விஞ்ஞானத் துறைகளில் மேம்பட்டிருந்தமை புலனாகின்றது.

மாணிக்கவாசகர் தாம் இயற்றிய சிவபுராணத்தில் புல்லாய், பூடாய், புழுவாய், மரமாய், மிருகமாய், பறவையாய், பாம்பாய், கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய், அசுரராய், முனிவராய், தேவராய் இவ்வுலகில் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் என்று கூறுகின்றார்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்

பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்

செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன். "

மேலும் அவர் 'பிறப்பறுக்கும் பிஞ் ஞகன்றன் மெய்கழல்கள் வெல்க' என்றும், 'மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி' என்றும் கூறிப் பிறப்பற்ற நிலையை நாடிச் செல்கின்றார்.

இன்னும் 'வீணே பிறந்திறந்து வேசற்றேன்.' என்று தான் பிறந்து, இறந்து சோர்வடைகின்ற நிலையினைக் குறிப்பிடுகின்றார் தாயுமானவர். மேலும் அவர் எத்தனை பிறப்போ, எத்தனை இறப்போ எளியேனுக்கு என்று தான் எடுத்த பல பிறவிகளை நினைந்து கசிந்து மனமுருகி இப் பாடலை வடித்துள்ளார்.

"எத்தனை பிறப்போ எத்தனை இறப்போ

எளியனேற் கிதுவரை அமைத்த

தத்தனை யெல்லாம் அறிந்தநீ அறிவை

அறிவிலி அறிகிலேன் அந்தோ.. "

இனித்தான் நாம் தலையங்கச் செய்திக்குள் நுழையவுள்ளோம். ஆறறிவுடைய விலங்குகளும் பறவையும் ஒருசில உள்ளன என்று தொல்காப்பியனார் சூத்திரமமைத்;து 'ஆறறிவு, ஒரு முடிவு' என்ற பகுதியில் காட்டியுள்ளார். அவையாவன கிளி, குரங்கு, யானை என்பனவாம். இவையும் ஆறறிவு கொண்டவையாகக் கணிக்கப்படும் என்றும் கூறுகின்றார்.

" ஒருசார் விலங்கும் உளவென மொழிப. " (பொருள். 578)

அக்காலத்தில் கிளி, குரங்கு, யானை போன்றவற்றின் அறிவுத்திறன் மிகுந்திருந்த காரணத்தால் அவற்றையும் ஆறறிவு உயிர்களாகக் கருதப்பட்டிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர்போலும். இன்னும் கிளி, மைனா ஆகிய பறவைகளை மக்கள் கூடுகளில் அடைத்து வைத்து அவைகளுக்குப் பேச்சுப் பயிற்சி அளித்து வருவதை நாம் அவதானித்து வந்துள்ளோம். இப்பறவைகள் வீட்டில் உள்ளவர்களை 'ஐயா', 'அம்மா' என்றும், யாராவது வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கு 'காலை வந்தனம்', 'வணக்கம்' கூறுவதையும,; இவைகள் ஆங்கிலத்திலும் பேசுவதையும் நாம் அவதானித்தும் உள்ளோம்.

மேலும் குரங்கு, யானை போன்ற மிருகங்களை மனித கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைத்து, அவைகளுக்கு நற்செயல்களைப் பழக்கி, அதனால் நன்மை அடையும் மக்களையும் நாம் காண்கின்றோம். மனிதனால் முடியாத செயல்களை யானை ஒரு சொற்ப நேரத்தில் செய்து முடிப்பதையும் நாம் கண்டு மகிழ்கின்றோம். இன்னும் மிருகக்காட்சிச் சாலைகளில் பயிற்றப்பட்ட யானைகளைக் கொண்டு ஒற்றைக் காலில் நிற்பதும், வீணை வாசிப்பதும், பாகனைத் தூக்கி ஆகாயத்தில் வைத்திருப்பதும், நாலு ஐந்து யானைகள் சேர்ந்து வட்டமாக ஓடுவதும், சிறிய ஆசனத்தில் குந்தி இருப்பதும், சபையோருக்கு நன்றி கூறிச் செல்வதும் ஆகிய 'யானை நடனம்' நடாத்தப்படுவதையும் இன்றும் காண்கின்றோம்.

தொல்காப்பியர் காலத்தில் தமிழகத்தில் நிலவியிருந்த சமூக அமைப்புகள், ஒழுக்க விழுமியங்கள், தனிமனிதப் பண்புகள், ஆடை அணிகலன்கள், மக்களிடையே வழக்கிலிருந்த கற்பொழுக்கம், களவொழுக்கம், கைஷ்ஷ்க்கிளை, பெருந்திணை, அக்காலத்தில் காணப்பட்ட சாதிய வளமைகள், பரத்தைமை, கரணம், திருமணங்கள் போன்;ற செய்திகளைத் தம் பிற்சந்ததியினருக்கு விட்டுச் சென்ற பெருமை தொல்காப்பியனாரின் பரந்த நோக்கை எடுத்துக் காட்டுகின்றது.

தொல்காப்பியத்தை ஆழ்ந்து ஆய்வு கொண்டால் அதிலடங்கிய பொக்கிசங்கள் பல வெளிவந்து மக்களை மேன்மேலும் அறிவூட்டும் என்பது திடமான உண்மையாகும்.



# அன்புக்கு நான் அடிமை!

திருச்சி சையது

"காற்றினிலே வரும் கீதம்..." இனிமையான குரலில் எம்.எஸ். சுப்புலெட்சுமி பாடிக் கொண்டிருந்தார் ரேடியோவில்..

அபீஸ் கிளம்பும் அவசரத்தில் இருந்தான் வசந்த்... அரசாங்க விழாக்களுக்கு அழைப்பிதழ்கள் அச்சிட்டுத் தரும் பிரபலமான ஆப்செட் பிரஸ்சில் கம்ப்யூட்டர் டிஸைனராக உத்தியோகம்.

"சரண்யா! மேஜையில் இருந்த ஆபீஸ் ஃபைலைக் காணாம்.... பாத்தியா?"

எல்.கே.ஜி. படிக்கும் மகன் கண்ணனை குளிக்க வைத்துக் கொண்டிருந்த அவனின் மனைவி சரண்யா நிமிர்ந்தாள்.


"பார்க்கலையேங்க... நீங்களே தேடி எடுத்துக்குங்களேன்... ப்ளீஸ்..."

குழந்தைக்குத் தலை துவட்டி, டிரஸ் போட்டு, முகத்திற்குப் பவுடர் அடித்த போது வசந்த் ஃபைலோடு வந்தான்.

"டிபன் ரெடியா சரண்யா"?

சமையல் அறையில் இருந்து குக்கர் விசில் சத்தம் கேட்டது.

"ஏங்க... வாசல் பைப்ல ரெண்டு குடம் தண்ணிப் பிடிச்சிட்டு வாங்களேன்... அதுக்குள்ள நான் டிபன் ரெடி



பண்ணிடறேன்"

"ஏய்ய்ய்.... விளையாடறியா? ஆபீஸ்க்கு டைமாயிடுச்சு... நீயே தண்ணிப்பிடி, நான் சரவணபவன்ல சாப்பிட்டுக்கிறேன்"

"என்னங்க... கொஞ்சம்கூடப் புரிஞ்க்காமப் பேசறீங்க... நான் மட்டும் வேலைக்குப் போகலையா...? ஸ்கூல்ல பத்துமணிக்கு இருக்கணும்... இப்பவே மணி ஒன்பது ஆயிடுச்சு... பஸ்ஸ பிடிச்சு போறதுக்குள்ள லேட்டாயிடும்... டீச்சரே லேட்டா போனா நல்லாவா இருக்கும்? கொஞ்சம் கூடமாட ஒத்தாசை பண்ணினா குறைஞ்ச போயிடுவீங்க"?

குக்கர் இரண்டாவது தடவை கூவ கிச்சனுக்குள் போனாள்.

வசந்த் அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ச்சே... நான் முரடன், என் பேச்சு சரண்யாவின் மனசை வேதனைப்படுத்தி இருக்குமோ? பாவம்... விடியற்காலையில் முழிச்சு, மெஷின் மாதிரி எல்லா வேலையையும் செய்யறா... அவ என்னை ஒரு தடவை கூட எதிர்த்துப் பேசினதேயில்லையே..."

நினைத்துப் பார்த்தான்...

ஒரு நாள் எனக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தபோது திடீரென்று நான் எடுத்த வாந்தியைக் கொஞ்சம்கூட அறுவெறுப்பே பார்க்காமல் அவள் தன் கைகளில் ஏந்தினாளே! நான் குறைவான சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தபோது என் தங்கச்சியின் கல்யாணத்திற்காகத் தன் கழுத்தை அலங்கரித்த பத்து பவுன் தங்கச் சங்கிலியைக் கழட்டிக் கொடுத்தாளே! அந்தப் பெருந்தன்மை எந்தப் பெண்ணுக்கு வரும்?

எனக்கு பைல்ஸ் ஆபரேஷன் நடந்து படுக்கையில் நான் கிடந்த போது, குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் தாயைப் போல் பரிவுடன் பார்த்துக் கொண்டாளே...!

சின்னக் குழந்தையாய் என்னைப் பாவித்து, நெயில் கட்டரில் எனக்கு நகம் வெட்டி விடுவாளே...! காசு சேர்த்து வைத்து என் பிறந்தநாளுக்கு எனக்குப் பிடித்த கலரில் ட்ரஸ் எடுத்துத் தந்து என்னைப் போடச் சொல்லி அழகு பார்த்து பூரிப்படைவாளே...! குளிக்கையில் என் தலைக்கு ஷாம்பு போட்டு, முதுகுக்கும் சோப்பு போட்டு என்னை ஆரோக்கியமாய் வைத்திருப்பாளே...! தினம் தினம் அயர்ன் பண்ணி எனக்கு மேட்சாய் ட்ரஸ் செலக்ஷன் பண்ணி காலேஜுக்கு நான் போவதைப் போல் ஆபீஸுக்கு என்னை அனுப்பி வைப்பாளே...! நான் போடும் ட்ரஸுக்கு மேட்சாக பேண்ட் பாக்கெட்டில் அதே நிறத்தில் கர்ச்சீப்பும், சீப்பும் மறக்காமல் வைப்பாளே....! ஆபீஸில் ஆயிரம் டென்ஷன்களோடு வேலை பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்தால் மல்லிகைப்பூ சிரிப்போடு அவள் தரும் காபியும், நெற்றிக்கு அமிர்தாஞ்சன் தேய்த்துவிடும் போதும், தலைவலியெல்லாம் பறந்து போய்விடும்...! நாள் முழுக்க கம்ப்யூட்டரில் உட்கார்ந்திருப்பதால் எனக்கு வரும் முதுகுவலிக்குத் தினமும் அவள் நீலகிரி தைலம் தேய்த்து விடும்போது எவ்வளவு ரிலாக்ஸாக இருக்கும்...!

சில நேரங்களில் எங்களுக்குள் சின்ன ஊடல் வரும்போது நான் கோபித்துக் கொண்டு கட்டிலில் படுக்காமல் வெறுந்தரையில் படுத்துவிடுவேன். விடிந்து பார்த்தால் என் தலைக்குக் கீழ் தலையணையும், என் மீது போர்வையும் கிடக்கும். என் மனைவி என் கால்மாட்டில் படுத்திருப்பாள். எனக்கு நல்ல சிநேகிதியைப் போல் மனம் விட்டுப் பேசி ஆறுதல் தருவாளே...! இரவுகளில் கேட்கும் போதெல்லாம் மறுப்பேதும் சொல்லாமல்... எப்படிப்பட்ட மனைவி இவள்...! எவ்வளவு இயல்பான கீழ்படிதல்! வணங்குவது தெரியாமல் வணங்கி, விட்டுக் கொடுத்து, கேட்டதும் சிணுங்காமல்... ஒரு அற்புதமான தேவதை – இப்படி மனைவியாய் கிடைக்க நான் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும்.

எனக்குப் பிடித்த பால் பனியாரமும்,

கசகசா தூவிய பனியாரமும், ஆவி மணக்க சுடச்சுட செய்து தர, சிக்கன் குருமாவில் பனியாரத்தை நனைத்து அஞ்சு, பத்து, பதினைந்து, இருபது என்று நான் வயிறார சாப்பிட அதைப் பார்த்து ஒரு தாயைப் போர் மகிழ்ந்து ரசிப்பாளே! அதே போல் எனக்குப் பிடித்த விரால் மீன் குழம்பும், கோலா உருண்டையும் அடிக்கடி ருசியாய் சமைத்துத் தருவாளே...! மீன் குழம்பு தேனாய் இருக்கும்! அன்று முழுக்க ஆபீஸில் கூட கையை முகர்ந்து பார்த்தால் வாசம் அடிக்குமே! கல்யாணத்திற்குமுன் பனானா லீப், இம்பாலா, சரவணபவன், ஆறுமுகம் ஹோட்டல் என்று எத்தனையோ ஹோட்டல்களில் நான் சாப்பிட்டிருந்தாலும் கூட என் சரண்யா வைக்கும் சாம்பாரின் ருசியே தனித்தான். சாம்பாரில் முருங்கைக்காயோ, மாங்காயோ போட்டுவிட்டால் கல்யாண சாப்பாடு சாப்பிட்ட மாதிரிதான்! அவள் கடும் மொறுமொறு தோசையைச் சாம்பாரில் குளிப்பாட்டி தொண்டையில் வைத்தால் தன்னாலே கரைந்து வயிற்றுக்குள் சென்றுவிடும். தயிர்சாதம் சாப்பிடும்போது அந்த சாம்பாரையும் கொஞ்சம் ஊற்றி அதில் பிசைந்து சாப்பிட்டால் அதிலும் ஒரு ருசி!


எனக்கு ஜலதோஷம் பிடித்திருக்கும் நாட்களில் அகன்ற பாத்திரத்தில் கொதிக்க வைத்த சுடுதண்ணீரில் விக்ஸ் போட்டு தலையைப் போர்வையால் மூடி ஆவி பிடிக்க வைத்து, கொஞ்ச நேரத்தில் முகம் பூராவும் பூத்த வியர்வையை பூத்துண்டால் இதமாய் ஒற்றி எடுத்து பிறகு சுடுதண்ணீர் போட்டு குளிக்க வைத்து, இரவு தூங்கும் போது காய்ச்சிய பசும் பாலில் மஞ் சள் தூள், மிளகுத்தூள் போட்டு குடிக்க வைத்து, ஸ்பூனில் விக்ஸ்ஸை சூடு பண்ணி நெற்றி, தொண்டை, நெஞ்சில் தேய்த்து விடுவாள்...! மறுநாளே சளி போய்விடுமே... “மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்” என்று கண்ணதாசன் அன்று பாடாமல் இருந்திருந்தால் அந்தப் பாடலை இன்று என் மனைவிக்காக நான் எழுதி இருப்பேன்

என் மனைவி எனக்குக் கிடைத்த அற்புதமான துணை, தவிர நான் நல்லது, கெட்டது தெரியாமல் குழந்தையைப் போல் தவிக்கும்போதெல்லாம் எது தப்புன்னு பார்த்துப் பார்த்து சொல்லக்கூடிய தாய்மை கலந்த மனைவிதான் என் சரண்யா! இந்த நிமிடம் வரை என் வெற்றி தோல்விகளில் எனக்குத் துணை நின்று வருகிறாள். எனது எல்லா வேலைகளிலும் அவள் துணைத்தான் எனது பலமே. எனது செக்கரெட்டரி! லீகல் அட்வைசர்! வெல் விஷர்! ட்ரஸ் மேக்கர்! – எல்லாமே அவள் தான். கடவுள் எனக்குத் தந்த வரம் என் மனைவி. அவள் இல்லாமல் நான் இல்லை. ஒரு நல்ல அழகான அன்பான மனைவியை கடவுள் எனக்குக் கொடுத்து இருக்கிறார்.

எனக்கு எல்லாமே அவள் தான்! என் இதயக்கோயிலில் ஸ்வரமாய்... லயமாய்... ராகமாய்... சகலமும் அவள் தான்!

என் இதமான பருவத்தோழி அவள். அவள் இல்லாத சமயங்களில் நானே இல்லாமல் போகிறவன். வெயில் கால நிழலாக, குளிர்காலக் கம்பளியாக, மழைநேரக் குடையாக, பசிநேர உணவாக, இருளில் ஒளியாக, துன்பத்தில் தலை தடவும் தோழியாய், வாழ்வில் வழிநடத்தும் ஆசிரியராய், நோய்நேரத் தாதியாய், தாயாய், தந்தையாய், தாரமாய், மடிதவழும் குழந்தையாய், தனிமைக்குத் துணையாய், மரணம்வரை கூடவே வருபவள் அவள் தான்! நான் ஒரு மலக்கலமானால் அதற்கு நங்கூரம் என் மனைவிதான்!

(“டேய்.... பெண்டாட்டி தாசா!” “டேய் ... சாப்பாட்டு இராமா!” என்று உங்களில் சிலர் சத்தமாய் என்னைத் திட்டுவது என் காதில் கேட்கிறது. அதைப் பற்றி எல்லாம் எனக்குக் கவலையில்லை... என்னைப் பொருத்தவரை மனைவி என்பவள் இன்னொரு அம்மா! பத்துமாசம் சுமந்தவள் தாய்... வாழ்க்கை முழுக்க சுமப்பவள் மனைவி! மகன் இறந்தால் தாய் அழுவாள். ஆனால் கொஞ்சக் காலம் கழித்து இன்னொரு மகன் இருக்கானே என்று தன்னை சமாதானப்படுத்திக்



கொள்ள முடியும். ஆனால் மனைவிக்கு...! கணவன் இறந்தால்.. பூ, பொட்டு இழந்து வெள்ளைச் சேலையில் விதவைக் கோலத்தில் முழுமையாய் பாதிக்கப்படுபவள் மனைவி தானே? வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்த கனவான்களே! என்ன இப்போது மௌனமாகி விட்டீர்கள்...?"

******

அதே நேரம் குக்கரை இறக்கி வைத்தாள் சரண்யா.

"ச்சே... என்ன காரியம் பண்ணிட்டேன்... அவசரத்தில் அவரையே எதிர்த்துப் பேசிட்டேன். எந்தக் கவலையும் இல்லாம என்னை மகாராணி மாதிரி சந்தோஷமா வெச்சிருக்காரு... ச்சே... எனக்குப் புத்தியே இல்லை...."

பழைய நினைவுகள் மனசில் ஊர்வலம் வந்தன...

நிச்சயதார்த்தம் முடிந்ததும் மாப்பிள்ளை என்ற பந்தா இல்லாமல் சிநேகிதனைப் போல் என் பிறந்தநாளுக்கு ஞாபகமாய் "வாழ்த்து அட்டை" அனுப்பி என் உள்ளத்தை கவர்ந்தாரே! போனில் "உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு! என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா....?" என்று என் விருப்பத்தையும் கேட்டாரே! திருமணத்திற்கு முன்பே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள... அவர் ஆசை, கனவுகளை

எல்லாம் மனம் திறந்து எழுதினாரே! "நாம ரெண்டு பேரும் தாத்தா, பாட்டியானாலும் சண்டையே போட்டுக்கக் கூடாது" என்று சொன்னாரே! மணப்பாறையில் திருமணம் முடிந்ததும், பிறந்த ஊரைவிட்டு, புகுந்த ஊரான திருச்சிக்கு அம்மா, அக்கா, அண்ணன்களை நான் கட்டிப்பிடித்மு அழுது... பிரிந்து.. காரில் ஏறியபோது என் அழுகையைப் பார்த்து அவர் கண்ணிலும் கசிவு தெரிந்ததே! கல்யாணமான புதிதில் "அம்மாவைப் பார்க்கணும் போல இருக்குங்க" என்று சொன்னால் உடனே மணப்பாறைக்கு அழைத்துச் செல்வாரே! எங்க அம்மாவிடமும் கூட மருமகன் என்ற பந்தாவெல்லாம் பண்ணாமல் மகனைப் போல அல்லவா பாசமாய் இருந்தார்!

இறந்து போன என் அப்பாவைப் போல் என் மீது கொள்ளை பிரியம் வைத்திருந்தாரே! தாம்பத்யத்தில் ஒரு பூவைத் தொடுவதைப் போல் மென்மையாய் நடந்து கொள்வாரே! உடம்பு சோர்வாய் இருக்கும் நாட்களில் மறுக்கும் போது அடம் பண்ணாமல்.. சமர்த்தாய் தூங்கி விடுவாரே! உடம்பு இமசைப்படுத்தும் அந்த மூன்று நாட்களில் என் கை கால்களை இதமாய் அவர் அமுக்கிவிட்டு, நெற்றிக்குத் தைலம் தேய்த்துவிடும்போது அவ்வளவு ஆறுதலாய்.. ஒரு சிநேகிதியைப் போல் இதம் தருவார்! நான் அதிகம் விரும்புவது இந்த நேசம் நிஜம் என்னும் நினைப்பை! நான் பெரிதும் பிரியப்படுவது என் பின் கழுத்தில் அவர் விரல் பதித்துக் கூந்தல் ஆழத்தில் செய்யும் கோதுகையை! பூக்களுக்கு சுளுக்கெடுப்பது போல் விரல்களுக்குச் சொடுக்கெடுக்கும் அந்த வேடிக்கையை! அவரின் மார்பில் முகம் புதைத்து விழித்துக் கொண்டே உறங்கும் ஒரு மயக்க நிலையை!

நான் கர்ப்பிணியாய் இருக்கும்போது என் மீது உசிரையே வெச்சிருந்தாரே! விடிகாலை அஞ்சுமணிக்கே எழுந்து துணிகளைத் துவைக்க உட்கார்ந்து விடுவாரே! பிரசவத்தின் போது ஸ்டெச்சரில் என்னை நர்ஸ்கள் ஆபரேஷன் தியேட்டருக்குள் அழைத்துச் சென்ற போது, பின்னால் சின்னக்குழந்தை மாதிரி அழுதுகொண்டே ஓடி வந்தாரே! குழந்தை நல்லபடியாய் பிறக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டு மொட்டை அடித்துக் கொண்டாரே! வாங்கும் சம்பளத்தை அப்படியே என்னிடம் கொடுத்து "நீயே குடும்பத்தைப் பார்த்துக்க!" என்று சொல்வாரே! "என்னைவிட நீதான் புத்திசாலி!" என்று அடிக்கடி என்னைப் புகழ்ந்து பேசுவாரே! "நீ குஷ்பூ மாதிரி அழகுடி!" என்று என்னைப் புகழ்வாரே! "என் யோசனையையும் கொஞ்சம் கேளுங்கள்" என்று நான் சொன்னால்... "கொஞ்சமென்ன உன் யோசனை எதுவாயிருந்தாலும் சொல்லு... முழுவதும் கேட்கிறேன்..." என்று என் கருத்துக்கு மதிப்பு கொடுப்பாரே!" உன் சந்தோஷம்தான் என் சந்தோஷம்"னு அடிக்கடி சொல்வாரே!

பொம்மனாட்டிகளை இப்படி உள்ளங்கையில் வெச்சுத்தாங்குற ஆம்பளைகள் ரொம்பக் குறைச்சல். உனக்கென்ன தெரியும் என்று அலட்சியப்படுத்தாமல் மதிக்கிற ஆண்கள் அபூர்வம்! இவர் ஆபூர்வம்! இவர் புருஷனாய் எனக்குக் கிடைத்தது என் பூர்வ ஜென்மப் புண்ணியம்!"... நினைக்க நினைக்க கண்களில் நீர் ததும்பியது.

"உன்னைத்தானே தஞ்சம் என்று
நம்பி வந்தேன் நானே, உயிர் பூ எடுத்து
ஒரு மாலையிட்டேன்
விழிநீர்தெளித்து ஒருகோலமிட்டேன்"

என்ற வைரமுத்துவின் பாடல் இப்போது ரேடியோவில் சங்கீதமாய் கேட்டது. இதைக் கேட்க எனக்குள் இனம் புரியாத அழுகை வந்தது. கணவனின் நினைவு வந்தது.

கணவனிடம் மன்னிப்பு கேட்க வெளியே வர... அவரைக் காணவில்லை.

வாசலில்... கையில் குடத்துடன், வாயில் விசில் அடிப்படியே தண்ணீர் பைப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்தான் அவள் காதல் கணவன் வசந்த்.




# போட்டிகளும் நடுவர்களும் (தலை) விதிகளும்

அன்பர்கள் சிலர் சேர்ந்து ஒரு முத்தமிழ்க; கலைவிழாவை ஏற்பாடு செய்தார்கள். அந்த விழாவிலே கலைநிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. சிறுவர்களை ஊக்குவிப்பதற்காகப் பேச்சுப்போட்டி, நடனப்போட்டி, திருக்குறள் மனனப்போட்டி என்று பல போட்டிகளும், வைத்தார்கள். போட்டிகள் ஒவ்வொன்றுக்கும் மூன்று நடுவர்களை நியமித்தார்கள். முதலிலே பேச்சுப்போட்டி நடந்தது. பல சிறுவர்கள்; பங்குபற்றினார்கள். அதிலே ஒரு சிறுவனுக்கு மூன்று நடுவர்களிலே ஒருவர் முதலிடம் கொடுத்தார். இரண்டாமவரம் இரண்டாமிடம் கொடுத்தார்.

ஐரோப்பிய நாடொன்றில் இருந்துவந்த நடுவர் நாலாமிடம் கொடுத்தார். அதனால் அச்சிறுவனுக்கு மூன்றாம் பரிசு கிடைத்தது. அன்று வீட்டுக்குச் சென்றபின் அந்தச் சிறுவனின் தாயார் இரண்டாவது இடங்கொடுத்த நடுவருடன் தொலைபேசியிற் தொடர்பு கொண்டார். ‘உங்களுக்கு எங்களோடு என்ன கோபம்? எல்லாப் போட்டிகளிலும் முதற்பரிசே பெறும் என் மகனுக்கு நீங்கள் எப்படி மூன்றாமிடம் கொடுக்கலாம்?’ என்று ஆரம்பித்து அந்த நடுவரைத் திட்டித்தீர்த்தார். அவர் திட்டி முடித்தபின் அவரின் கணவர், பையனின் தகப்பன், நடுவரைத் திட்டினார். அச்சிலே போடமுடியாத வார்த்தைகளும் பேச்சிலே வந்தன. நடுவரோ போட்டி முடிந்தபின் அதுபற்றிப் பேசுவது நல்லதல்ல, வேண்டுமானால் நீங்கள் அமைப்பாளரிடம் முறையீடு செய்யலாம் என்று சொல்லிப்பார்த்தார். அவர்கள் கேட்பதாக இல்லை. விதிகளை விளக்கி எப்படி இந்த முடிவுக்கு நடுவர்கள் வந்தார்கள் என்று புரியவைக்க முயன்றும் தோற்றார் அவர். பின் தன் தலைவிதியை

நொந்துகொண்டார்.

இதுபோலத்தான் அண்மையில் நடந்துமுடிந்த ஒரு திரைப்படப் பாடற்போட்டியும் அமளிப்பட்டது. தமிழ்நாட்டின் ஒரு தொலைக்காட்சி நிலையம் நடத்திய திரையிசைப் பாடற்போட்டி. அதிலே பிறமொழிபேசும் பல மாநிலச் சிறுவர்கள் பங்குகொண்டார்கள். போட்டியிலே சில முடிவுகள் தம்முடைய அபிமானப் பாடகருக்குச் சாதகமாக அமையாதபோது மக்கள் கொதித்தார்கள். எப்படிப் போட்டி விதிகளைப் பாதியில் மாற்றலாம்? ஏன் முதலிலே விதிகளை அறிவிக்கவில்லை? தமிழர் அல்லாதவர் எப்படி நடுவர்களாக இருக்கலாம்? என்றெல்லாம் கேள்விகள். சிலர் நடுவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையைக் கொச்சைப்படுத்தி மிகக் கேவலமாக எழுதினார்கள். அந்தக் கருத்துக்கள் உண்மையானவையா என்றே தெரியாத வெறும் கற்பனைப் புனைவுகள். அதைப் பண்பான முறையிலே தெரிவித்தாலாவது பரவாயில்லை. நடுவர்களையும் மற்றைய மொழிபேசும் மக்களையும் பற்றி மிகக் கேவலமாகத் திட்டி எழுதினார்கள். சில 'இரசிகர்கள்?'. வேடிக்கை என்னவென்றால், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத நடுவர்களென்று யாரைக் குற்றம் கூறினார்களோ, அந்தப் 'பிறமொழி' நடுவர்கள் பாடும் சிறுவர்களின் தமிழ் உச்சரிப்பைத் திருத்தினார்கள் என்பதுதான்.

இதிலே சிந்திக்கவேண்டிய சில விடயங்கள் உள்ளன. பாட்டுப்போட்டிக்கு நடுவர்களாக வருவோருக்கு இசை நுணுக்கங்கள் தெரிந்திருப்பதுதான் முக்கியமே தவிர மொழியல்ல. அப்படியிருந்தும் மேலே குறிப்பிட்டது போல அவர்கள் தமிழையும் திருத்தினார்கள் என்பது தான் உண்மை. போட்டியிலே பங்குபற்ற விரும்புகின்றவர்கள் போட்டி விதிகளுக்குக் கட்டுப்படவேண்டும். அதிலே முக்கியமான விதி, நடுவர்களின் தீர்ப்பை ஏற்கவேண்டும் என்பதே. போட்டி விதிகளைப் போட்டியிலே பங்குபெறுபவர்களுக்கு மட்டுமே தெரிவித்தாற் போதுமானது, பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் போட்டி நடத்துபவர்களுக்கு இல்லை.

'டென்னிஸ்', 'கிரிக்கெட்' போன்ற விளையாட்டுக்களிலே நடுவர்களை, அவர்களின் தீர்ப்பை மதிக்கும் மரபு மற்றைய விளையாட்டுக்களோடு ஒப்பிடும்போது அதிகமாகவே பார்க்கலாம்.

நடுவரை அவமதித்தால் அதற்கான தண்டனை உண்டு. காற்பந்துப் போட்டிகளிலே இந்தப் பண்பைப் பார்ப்பதே அரிது.

போட்டிக்குப் போடுகின்றவர்கள் வெல்லவேண்டும் என்ற நோக்கோடுதான் போகிறார்கள். அப்படித்தான் போகவேண்டும். அதிலே எந்தத் தவறும் இல்லை. ஆனால், போட்டியிலே ஒருவர்தான் வெல்லலாம். எல்லோரும் முதலாவதாக வரமுடியாது. போட்டி விதிகளை மதிக்கப் பழகவேண்டும். நடுவர்களின் தீர்ப்பை ஏற்கப் பழகவேண்டும். நடுவர்கள் நடுவுநிலையைத்தான் கொள்வார்கள். அவர்களும் மனிதர்கள்தான். தவறுகள் வரலாம். ஆனால், குறிப்பிட்ட ஒருவர் வெல்லக்கூடாது என்றோ, இன்னொருவர் வெல்லவேண்டும் என்றோ நினைக்கும் எண்ணத்தோடு நடுவல்கள் ஒருபோதும் நடக்கமாட்டார்கள் என்பதே உண்மை. அதை ஏற்கும் மனப்பக்குவம் இல்லாதவர்கள் போட்டிக்குப் போகக்கூடாது.

வெளியிலே இருந்து பார்க்கும்போது நடுவர்கள் நம் எண்ணப்படி தீர்ப்புச் சொல்லவில்லை

என்றால் நமக்குக் கசக்கும். அறிவு பூர்வமாகச் சிந்திக்காமல் உணரவுப் பூர்வமாகச் சிந்திப்பதன் விளைவு இது. கருத்துச்சொல்ல எல்லோருக்கும் சுதந்திரம் உண்டு. அதைப் பண்போடு பக்குவமாகச் சொல்ல முடியாதவர்களும் நடுவர் தீர்ப்பை மதித்து ஏற்கமுடியாதவர்களும் போட்டிகளுக்குப் போகாமல் இருப்பதே நன்று.

# மூதுரை



**ஏற்ற அளவே பலன்**

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடனீர்
நாழி முகவாது நானாழி - தோழீ
நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்.

**தோழியே, ஆமாகிய கடலிலேயுள்ள நீரை அமுத்தி மொண்டாலும் நான்குபடி நீரை ஒருபடி மொள்ளாது. (அதுபோல) செல்வமும், ஆளத்தக்க தலைவனும் அமைந்திருந்தாலும் அவரவருடைய முற்பிறவியில் செய்த வினையின் பயனுக்கு ஏற்ற அளவே பலன் பெற முடியும்.**

**(கருத்து - செல்வம் அடைந்து, அச்செல்வத்திற்குத் தக்க தலைவனும் அமைந்தாலும் நினைத்தபடியே அனுபவித்து விடமுடியாது. விதிக்கீடாகவே அனுபவிக்க முடியும் என்பதாம்)**



அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்
வழங்கும்
மாதம் இரண்டு திருக்குறள்
தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.
தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.
ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.
ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.
திருக்குறள்
இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்
விலை. 2 பவுண்ட் மட்டும்

# Best Food

**11-13 Ealing Road Wembley**
**Middlesex HAO 4AA Tel : 0208 9000100**

**364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT**
**Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323**

**259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL**
**Tel : 020 8684 6269, Fax : 684 4677**




எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும்
அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை
சேமியுங்கள்



Rathy Jewellers Ltd
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
Opening Hours
Mon-Sat 10 am
to 6.30 pm
Sun 12 Noon
to 6.30 pm
The Leading Jewellery Store
in London with the Largest
Selection including
Diamond Jewellery,
Thaali Kodi and all
Studded Jewellery
WEMBLEY BRANCH
28 Ealing Road, Wembley
Middlesex HA0 4 TL, 020 8903 3063
TOOTING BRANCH
209 Upper Tooting Road
Tooting SW 17 7TG, 020 8682 2233
எங்களிடம் வரும் பழைய நகைகள் புதுப்பிக்கப்பட்ட
பின்னர் தான் மீளத் தயாரிக்கப்படுகிறது அதனால்
எல்லா நகைகளுக்கும் 22கரட் சரியாக இருக்கும்




Hotel Westeern
Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place
Bambalapitiya
Colombo 4, Sri Lanka
Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com
Approved by the Ceylon Tourist Board
EELAM SHOP
399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
TeL : 020 8690 6545

செல்வராஜா
கோடைகால விடுமுறையை முன்னிட்டு புடவைகள் நகைகள்
அனைத்தும் நம்ப முடியாத விலைக்கழிவில்
£ 200 Gift Voucher
இலவசம்
£ 100 Gift Voucher
FREE
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
சீட்டுத் திட்டத்தில் இணைந்து
நீங்களும் ஒரு அதிஸ்டசாலி
ஆகுங்கள்.
Selvaraja Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees
162b, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269




Athavan TV
24 Hour Tamil Channel
Drama | Movies | Music | News | Sports | Live Events | Religion | Life Style
Free Channel
Satellite: (Eurobird 9a)
Freq: 11843
Vertical Symbol Rate: 27500
FEC – ¾
நம்ம நட்சத்திரங்களின் அணிவகுப்பு
Monday to Friday 8.30 PM
ரிஷிமூலம்
Sunday 9.00 PM
மேளம் கொட்டு தாலி கட்டு
Saturday 8.00 PM
நாயன்மார்கள்
Monday to Friday 6.00 PM
உணர்வுகள் ஒரு முன்னோட்டம்
Monday to Friday 8.00 PM
மல்லி
Monday to Friday 6.30 PM
Latest Movies
Daily 2.00 PM
Juniors
Sunday 11.00 AM
லட்டு
Monday to Friday 5.00 PM
NEWS UPDATE
BREAKING NEWS
News That's Making News!
8AM 1PM 7PM
விளம்பர தொடர்புகளுக்கு
UNITED KINGDOM 0203 318 2004
FRANCE 097 518 0123
ITALY 0247 921 666
GERMANY 0305 6837 0039
SWITZERLAND 0435 082 375
SWEDAN 085 250 0208
WWW.ATHAVAN.TV


இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


லூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை
கற்பகம்
தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்
KATPAGAM
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 020 8694 8810
உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்


எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner


Anthoorium
World of Designs
Jewellery & Textiles




JOIN US ON YouTube www.youtube.com/ayngaraneurope www.facebook.com/ayngaran visit us: www.ayngaran.com

# வருந்துகிறோம்



திருமதி

**வாசுகிபத்மநாதன்**

கணவர்:

**வ.இ. பத்மநாதன்**

மகள்:

**விஜயலட்சுமி**

மகன்:

**செந்தூரன்**

**தமிழர் தகவல் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிக்கிறது**


Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

**SRI STORE**

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane**
**Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**






லூசியத்தில்
தரமான
நகைக்கடை

**Thinesh**

**Jewellers & Textiles**

276, Lewisham High Street
Lewisham London SE 13, 6JZ
Tel : 020 8613 9569 www.thinesh-jt.com




91 years of silk heritage
RmKV
Wedding Silks
handcrafted
Silks of India
Bridal Seven
தமிழ்நாடு
subrata bhowmick design
சென்னை: ஃபோரம் விஜயா மால், வடபழனி | ஃபீனிக்ஸ் மார்க்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்
கோயம்புத்தூர்: ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு | திருநெல்வேலி: வண்ணார்பேட்டை | பெங்களூரு: ஓரையன் மால்
www.facebook.com/RmkvSilks | www.rmkv.com

# லண்டனில் அதிக காய்கறி வகைகளை இறக்குமதி செய்து விற்பனை செய்பவர்கள்






1473



Lycamobile
Call the world for less
Special rates with UK plan
SRI LANKA
3p /min
Landline + Mobile
£12 a month
1000 UK mins
2GB DATA
Unlimited UK texts
Unlimited calls and texts from Lycamobile to Lycamobile
To buy: Text 12044 to 3535
Official Partner
DreamWorks
HOME
ONLY IN CINEMAS
No Roaming Charges
when you use your Lycamobile abroad in 17 destinations
Australia Austria Belgium Denmark France Germany Ireland Italy Netherlands Norway Poland Portugal Romania Spain Sweden Switzerland USA
Order your free SIM at www.lycamobile.co.uk/Srilanka
or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs
TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl
Special International rates for UK Plans customers offer ("the offer") is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with UK PLAN 7.5 or more. (Except UK plan 5). Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. These rates are valid until 30-04-2015. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. The offer is valid from 01.01.2015. Customers must buy a bundle or top-up for no roaming costs on calls and texts. Customers must buy a specific data bundle for no roaming costs on data – full details at lycamobile.co.uk. Free Lycamobile to Lycamobile calls when roaming are restricted to a total of 100 minutes (applicable to both inbound and outbound calls). No roaming costs are only available for a continuous period of 59 days.
DreamWorks Home © 2015 DreamWorks Animation L.L.C. All Rights Reserved
Lyca mobile
Call the world for less